V2. N10·6. 7 Feb 1929

JL
211, N28KN
N29·2·6.
189041

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

A Literary Weekly

வியாழன் தோறும் வெளிவரும்

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 ஹு பிப்ரவரி மீ 7உ [No. 6.

OFFICE OF THE REG... 1929 MADRAS

பொருளடக்கம்.

1.	தலையங்கம் (Leader).	101
2.	அப்பர் — E.N. தணிகாசலமுதலியார் B. A., B. L.	103
3.	காதலாலோ இராமன் கார்முகத்தை இறுத்தான்? — K. இராமரத்நம் ஐயர் B. A.	104
4.	வில்லிபாரத விளக்கம். — T. S. நடராஜ பிள்ளை B. A., B. L.	109
5.	தமிழ்ப் பாடம்	111
6.	மரகதத் திளவரசன் (A Novel) — T. N. சேஷாசலம் B.A., B.L.	112
7.	பிளோதைனன் — T. R. இராஜகோபால்	115
8.	வர்த்தமானம்	119

சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமானாலும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி யில் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பினாங் தென்னாப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி. யில் அனுப்ப இயலாது. மானேஜர்.

க லா நி ல ய ம்.

அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம்.

"கல்வி நாம் கல்லாது பெரிதுங்கெட்டோம்" என்று பிராமணரல்லாதாரும், 'அழுத்தப்பட்டவர்கள்' என்றோ 'தாழ்த்தப்பட்டவர்கள்' என்றோஒரு பட்டங் கட்டப்பட்டிருக்கின்ற பிறவகுப்பினோரும்சிலகாலமாகக் கிளர்ச்சிசெய்துவருகின்றதைப் பார்த்தனர் பிராம்மணர். தாமும் கெடுதி அடைந்திருப்பதாக நினைத்தனர். தங்களுடைய முன்னேற்றத்திற்குத் தாங்களும் ஒரு கிளர்ச்சி செய்யவேண்டியது இன்றியமையாததென இக்காலக் கோலத்திற் கேற்றவாறு அவர்களுக்குந் தோன்றியது. இனியென்! இரண்டுமூன்று ஆண்டுகளாய்ப் பிராம்மணர் 'மகாநாடுகளும்' கூடலாகின்றன. கூடி, 'ஐயயோ, கல்வியைக் கற்றுக்கற்றே நாம் கெட்டோம்' என்று ஏங்குகின்றார். என்ன விபரீதம்! கல்வியில்லாது கெட்டனராம் அவர், இவர் கல்வி யிருப்பதால் கெட்டனராம். பகுத்தறிவென்பதை மக்களனைவரும் எங்குவைத்து மறந்தனரோ அறிகிலேம். சமீபத்தில் நடந்த திருச்சிஜில்லா பிராம்மணர் மகாநாட்டில் ஸ்ரீமான் N. T. லக்ஷ்மி நாராயண ஐயரவர்கள் பேசியதில் பின்வரும் சில வாக்கியங்களைச் 'சுதேசமித்திரன்' பத்திரிகையிற் கான நாம் பெரியதொரு வியப்பும் வியாகுலமும் அடைகின்றோம்:—

"நாம் நம் ஜாதியாரின் தன்மையாலும் அபிவிருத்தியாலும் வித்யாசம்பந்தமான மூளை வேலையிலேயே ஈடுபடுகின்றமையால், நம் யுவர்களுக்கு ஏற்படக்கூடிய உத்தியோகவகை மிகவும் குறுகிய அளவு உடையதாக ஆகியிருக்கிறது. தற்பொழுது வித்யா சம்பாதனத்திலேயே பெரிதும் உழைத்துநிற்கும் நம்மவர் தம் தேக சவுக்கியத்தைக்கூடக் கவனியாது அதனில் முயன்று நிற்பது மிகவும் துக்கிப்பதற் குரியது. நம் சமூகம் மறுபடியும் தன் முழு வலிமையை அடைய வேண்டுமெனின் தேகப் பயிற்சியிலும் தேகாப்பியாசத்திலும் அதிக கவனம் நாம் செலுத்தவேண்டும். நமது செல்வ விருத்திக்கும் நமது யுவர்களை வித்தியா சம்பந்தமல்லாததும் நம் சாஸ்திர விருத்தமல்லாததுமான பிறதொழில்களுக்கும் உத்தியோகங்களுக்கும் பழக்கஞ் செய்விக்கவேண்டும். நம் இளைஞர் யாவரையும் திடகாத்திரர்களாகவும், நல்ல வியாபார புத்தியுடையவர்களாகவும், எல்லாவற்றையும் விட முக்கியமாக, இந்தப் புராதன பாதகண்டத்திற்கு யோக்யமான புத்ரராகவும் பயிற்சி செய்விப்பதில் நம் முழு கவனத்தைச் செலுத்தவேண்டும்."

நமது ஐயரவர்கள் நனிவருந்தி இங்குச் செப்ப முயல்கின்ற விஷயத்தின் முடிவு என்ன? வேதமோதிய வேதியர்க்கு மழை பெய்ததென்பதை மறந்து அரிசி விற்றிடாததால் அந்தணர்க்கு ஓர்மழை பெய்யவில்லை என்று கொள்கின்றார். பிராமணர்கள் இக்காலம் "வித்யாசம்பந்தமான மூளைவேலையிலேயே ஈடுபடுகின்றார்க" ளென்பது சிறிதும் நிசமன்று. அவர்களும் மற்றவர்களைப் போலவே வாய் சம்பந்தமான வேலைகளிலும் கை சம்பந்தமான வேலைகளிலுமே ஈடுபட்டிருக்கின்றனர். பொருள் செய்கின்றதுடன் சம்பந்தப்

பட்ட வேலையெதுவும், வித்யாசம்பந்தமான வேலையு மன்று, மூளைவேலையுமன்று. மூளையிருப்பவர் அந்த வேலை செய்யமாட்டார். மூளையிருப்பவர் கவிகளைப் போல், மற்றுள கலைஞரைப்போல், தமக்கென மனோ ராஜ்யம் ஏற்படுத்திக்கொண்டு இரவீந்திரநாதர் அரவிந்தர் அனைய மேன்மக்கள் இந்நாளும் கூறுகின்ற ஆன்மவாழ்வினில் வைகுவார். பார்ப்பனர் பண்டை நாளில் தாம் பெருவாழ்வு வாழ்ந்து உந்நத நிலையில் இருந்தனர் என்று சொல்லிக்கொள்கின்றனரே. இருந்தனராயின், எதனால் இருந்தனர் ? உடலைக்கொழுக்க வைத்தா? 'வித்யாசம்பந்தமல்லாத' தொழிலாகத் தேடி தேடித் தம்மைப் பழக்கிக்கொண்டதனாலா? ஒவ்வொரு அந்தணனும் நல்ல வியாபார புத்தியால் தன்முதுகில் ஒரு அரிசி மூட்டையைச் சுமந்துசென்று தெருத் தெருவாய் விற்றதாலா! இதனோடு, ஐயரவர்கள் "சாஸ்திரங்களின் தத்துவங்கள் யாவும் ஜீவகளையுடன் இருந்து நம் வாழ்க்கையையும் ஒழுக்க வழக்கங்களையும் ஏற்றவாறு விதித்து நின்ற(முன்) காலத்திலிருந்து நாம் மிகவும் பரிதாபகரமான நிலைக்கு இழிந்துவிட்டோம்" என்று இயம்புகின்ற பின் வாக்கியத்தையும் சேர்த்துப்பார்ப்போமானால், பார்ப்பனர்க்கு முன்காலத்தில் ஜீவகளையுடைய சாஸ்திரங்களின் தத்துவம் விதித்த ஒழுக்கவழக்கங்கள், பணம் சம்பாதிக்கும் பொருட்டுஏற்பட்டிருந்த தேகப்பயிற்சியும்வியாபாரப் பழக்கமுமேபோல் தோன்றுகின்றன. அந்நாட்களில் அந்தணன் வேதம்ஓதினான், முத்தீவளர்த்தான், ஓதல் ஓதுவித்தலாதிய அறுதொழில் புரிந்தான், எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகினான். உத்தியோக ஊதியத்திற்கும் வர்த்தகஇலாபத்திற்கும் வயப்படாது தனியரசாட்சியில் தாழ்ந்ததவ னுள்ளம். சாஸ்திரங்களும் இவைகளையே கூறுகின்றன. முன்னைநாள் அந்தணன் மேன்மையுற்றிருந்தது உண்மையாயின் இவைகளாற்றான் அவன் மேன்மையுற்றிருந்தான் என்பதும் உண்மை. இவைகளை விட்டநாள்முதல், உத்தியோகமும் வியாபாரமும் பற்றியநாள்முதல், அவன் வீழ்ச்சி ஆரம்பித்தது. சாஸ்திரங்களையும் வைதிகமார்க்கங்களையும் நமது ஐயரும் அவரனைய பார்ப்பனரின் 'புனருத்தாரண' புத்தியுடையவர்களும்நம்புகின்றவர்களாகவிருந்தால் வர்த்தகப்பயிற்சி போன்ற 'வித்யாசம்பந்த' மற்ற தொழில்களில் வேதியர்க்கு வழிகாட்டமாட்டார். ஆனால், இவரோ சாஸ்திரங்களில் முழுநம்பிக்கை யுடையவராகக் காண்கின்றார். ஏனெனில், கூறுவார்:—

"நமக்கு விசேஷ ஆபத்து ஒன்று ஏற்பட்டிருக்கின்றது. நம் அரசாங்கத்திலே தோன்றியுள்ள சட்டசபையார் நம் வைதீக ஆசாரங்களிலே தலையிடவும் ஆரம்பித்துவிட்டனர். இதனைநாம் முழுபலத்துடன்எதிர்க்கவேண்டும். நம் சட்டசபையிலே பதவி பெற்றுள்ள அங்கத்தினர், சர்வதேச சமூகமத்தியிலே நம் பாதகண்டத்தை மகாசம்பத்துடன் விளங்கும் ஒரு தேசமாகத் தோற்றுவிக்கும்பொருட்டுத் தம் லௌகீக யுக்தி புத்திகளைச் செலவிடாது, வைதீக சாஸ்திர சம்பந்தமான விஷயங்களிலே தம் அதிகாரத்தை உபயோகிக்க விரும்புவது தேசத்திற்கே ஒரு அவமானத்திற்கிடமாகும். பேச்சு எண்ணம் வியவகாரம் யாவற்றிலும் சுயேச்சையை விரும்பும் முன்னேற்ற நோக்குடைய ஜனத்தலைவர் என்று கூறிக்கொள்ளும் புத்திமான்கள்கூட, ஜனங்கள் தம்முடைய ஆசாரங்களைத் தம் கொள்கைகளின்படி அனுஷ்டிக்க விடாமல் தடை விலங்குகள் ஏற்படுத்துவது நமக்கு ஆச்சரியமாகவும் துக்ககரமாகவும் இருக்கின்றது. ஜனங்களிலே ஒரு பகுதியாரின் சமூக, வைதீகசுயேச்சையைத் தளைசெய்வதாயினும் இத்தகைச் சட்டங்கள் வெறுக்கத் தக்கனவேயாம்"

இவ்வாசகத்தில் எந்தச் சட்டங்கள் குறிக்கப்பட்டுள்ளன வென்பது வெளிப்படை. இவ்வகைகளில் மாத்திரம் வைதிக ஆசாரங்களைப் போற்றிச் சிதைவுறாமல் காக்கவேண்டுமென்ற ஆர்வமேன்? காவியநாடக அலங்காரங்களும், தர்க்கவியாகரண மீமாம்ஸங்களும் நான்கு வேதமும், நூற்றெட்டு உபநிடதங்களும் பிராமணன் பயிலவேண்டுமென்றும் பயிற்றுவிக்க வேண்டுமென்றும் சாஸ்திரங்கள் சொன்னது ஐயமற்றவோர் உண்மை. கூசாது அதனைப் போக்கிலே போகவிட்டுத் தேகப்பயிற்சியிலும் தொழில் முறைகளிலும் வர்த்தக இலாபத்திலும் பிராம்மணன் இப்பொழுது புத்தியைச் செலுத்தினால்தான் முன்னேற்றம் அடைவானும். மற்று, விவாக வயதும் விதவா விவாகமும் சாஸ்திரங்களுக்குள்ளேயே மாறுபட நிற்கின்ற விஷயங்களாயிருக்க அவைகளைச் சட்டங்களால் மாற்றினால் ஆசாரவிரோதமாகிப் பிராம்மண குலத்திற்கு 'விசேஷ ஆபத்து' விளைந்துவிடுமாம்.

பிராம்மண சமூகம் தன்னிலை யிழந்ததெனில் அன்னதற்கு வர்த்தகமும் கைத்தொழிலும் உத்தியோகத்திற்கேற்ற மூளையின் கூர்மையும் கற்கப் புகுந்ததேயாகும். இவ்வாறு அழிந்திருக்கின்ற இப்பார்ப்பனரின் நிலையைக்கண்டு பார்ப்பனரல்லாதார் சிலர் அதுவேதான் தாம் அடைதற்குரிய உயர்ந்தநிலை என்பார்போல் பாவித்து எவ்வெவை அவர்களை இவ்விழிவிற்குக் கொண்டுவந்தனவோ அவைகளைக் கற்றே தாம் முன்னேற்றம் அடையவேண்டுமென்று விவகரிக்கின்றனர்.

மகாநாடு என்பது ஒருபெரும் ஓட்டுவாரொட்டி. தத்தம் சமூக 'முன்னேற்றம் முன்னேற்றம்' என்றவொன்றை அடைய முயலாதிருப்பாராயின் சிற்சிலர் பின்னேனும் இழியாமலிருப்பர். ஒரு ஜாதியாரின் வளர்ச்சி அதனைச் சேர்ந்த ஒவ்வொருவனது சுய வளர்ச்சியைப் பொருந்தியது. நாம் முன் இத்தலையங்கங்களின் பலவிடங்களில் காட்டிய இலக்கணத்திற்கிணங்கிய மெய்க்கல்வியில் அவரவர் தன் வரையில் தேர்ந்துகொள்ள வேண்டுமென்ற தொன்றே நோக்கமாக அமையாதுவிட்டால் எல்லாரும் வரவர இழிந்து நல்லனபாவும் நில்லாது அழிந்தே போம். கவிகளைக் கொள்வோம் இன்றே நம் கையில்—மற்றவெலாம் நாளை !

இதுவரையில் இவ்வருடச் சந்தாவை அனுப்பாதவர்களுக்கு இன்றுமுதல் வி. பி. அனுப்பிக்கொண்டு வருகின்றோம். தயவுசெய்து தாமதமின்றிப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

மானேஜர்.

OFFICE OF THE R... 929 MADRAS

அப்பர்.

2. அப்பர் யௌவனமும் பலசமய ஆராய்ச்சியும்.

2. அப்பர் எவ்வளவுகாலம் சமணரா யிருந்தாரேன்பதின் ஆராய்ச்சி.

87 பக்கத் தொடர்ச்சி

அப்பர் சமணமதம் கைவிட்டநாளும் திருப்பூவனூரில் பதிகம்பாடிய நாளும் ஒரேநாளிற் கொண்டாடக்கூடிய நாள்களாம் *. ஆயினும் அவ்வாறு மொழிவது தண்டுகமண்டலநியாயமாய் நிற்பினும், திருப்பூவனூர் ஸ்தலபுராணங்கள் முதலியவற்றால் ஆராயக் கூடுமாதலால், அப்பர் சிவனடியாரானநாள் இன்னதென்று பிற்கால ஆராய்ச்சிக்கு விடப்பட்டது. அப்பர் சமணமதம் நீங்கியநாளில் எவ்வளவுவயதுபெற்றவர் என்பதும் †சிவனடியா ரானது முதல் கல்லினோடுபூட்டிக் கடலில் எறியப்பட்டவரையில் வகுத்துள்ள விஷயங்களுள் எவ்வெவ்வெவை தேவார ஆராச்சியில் பொருந்துவன வென்பதும் சற்றுக் கவனிப்போம் :—

சேக்கிழார் கூற்று இரட்டுற மொழிதலென்னும் உத்திபெற்றதாய், ஒருவாறு கவனிப்பதில், அப்பர் சில மாதங்கள் சமணராயிருந்து மீண்டும் சைவரானது போலவும், மற்றொருவாறு நோக்குவதில் சிலவருடங்கள் கழிந்தபின்னரே அப்பர் சைவமதத்திற்கு மீண்டதுபோலவும் காணப்படுகின்றது. சமணரான சங்கதி கேள்விப்பட்ட திலகவதியார் திருவதிகை வீரட்டானம் அடைந்து கோயில் திருப்பணிகள் செய்ய ஆரம்பித்துச் செந்நெறிக்குத் திருப்பவேண்டுமென்னும் வேண்டுகோள் ஈச்வரனைச் செய்ததும், ‡அதற்கிணங்கிச் சிவபெருமான் சூலைநோய் தந்தாண்டாரென்பதும் காணுங்காலை, இச்சந்தர்பங்கள் யாவும் ஒருவருடத்திற்குள் முடிந்திருக்கவேண்டுமென்றே நாம் அபிப்பிராயப்படுகின்றோம். ஆயினும் மருணீக்கியார் சமண நூல்கள் யாவும் ஓதித் தேரரை வாதில்வென்று தருமசேனரென்னும் பட்டம்பெற்று மேன்மை யுற்றாரென்பதை நோக்குமிடத்து, அப்பர் நெடுங்காலம் ¶ சமணராயிருந்திருப்பாரென்பதற்கும்இடங்கொடுக்கின்றது. இவ்வாறு சேக்கிழார்பெருமான் இரட்டுற மொழிந்த காரணமும் அவர் கர்ணபரம்பரையிற் கேட்ட அப்பர் சரிதைக்கும் அவர் செய்த தேவார ஆராய்ச்சிக்கும் பேதாபேதங்கள் ஏற்பட்டமையே யென்று நாம் அநுமானிக்கலாகும்.

அப்பர் சமணரானபோது † யௌவன பருவத்தின ராயினும் மீண்டும் சைவரானபோது முதிர்ந்த வயதுடையவரென்றே நாம் கொள்ளத்தக்க அத்தாட்சிகள் பல உள. இவர் பாடல்கள் சம்பந்தர் பாக்கள்போல் சிறுபிள்ளையின் உருவம் காட்டவில்லை. பாக்களின் நடைகளைப்பார்க்கும்போதே பாடியவர் வயது சற்றேறக்குறைய அநுமானிக்கும் அத்தாட்சிகள் பாடியவருக்குத் தெரியாமலே தோன்றுமாதலால், திருநாவுக்கரசுநாயனார் வயதும், இராவணனுக்குப் பரமன் அருளியதைப் பத்தாம் பாசுரமாக அமைத்துப் பாடிய பாடல்களில் நன்கு விளங்கும். சமணர் கல்லிற்பிணித்துக் கடலிலிட்ட சில நாட்களிற் பாடிய தேவாரப் பாக்களில் ஒன்றாகிய திருவேகம்பத் திருப்பதிகத்தில் இவர் வயதுமுதிர்ந்தவரென்று நிச்சயிக்கக்கூடிய பல சொற்றொடர்களைக் காண்கிறோம் *. இதன்றியும் தமிழ்க் கல்வியிற் சிறந்த சமணர் பள்ளியில் சமணமத நூல்கள் கற்றுத்தேர்வதற்குப் பலவருஷங்கள் அப்பருக்குச் சென்றிருக்க வேண்டும். ஏதோ தற்செயலாய் வந்த ஒரு சைவன் மறுபடியும் சைவனாய் மீண்டிருப்பின், சமணர்களுக்கு யாதொரு துன்பமும் நேராது. சமண மதத்திற்கே ஒரு ஸ்தம்பமாய் எண்ணப்பட்டிருந்தாரென்பது புராணம் கூறுவதால் இவர் சமணர் நேசமும் உறவும் பலகாலம் பெற்றிருந்தாரென்பதற்கு ஐயுறவில்லை. ஆயினும்அப்பர்மீண்டும்

* ஏவ மேதுமி லாவம ணேதலர்
பாவ காரிகள் சொல்வலைப் பட்டுநான்
தேவ தேவன் திறநெறி யாகிய
பூவ னூர்புகு தப்பெற்ற நாளின்றே
—திருப்பூவனூர்-திருக்குறுந்தொகை 9.

† முன்பெலா மிளைய கால மூர்த்தியை நினையா தோடிக்
கண்கண விரும்பி னாளும் கருத்தழிக் தருத்த மின்றிப்
பின்பக லுணங்க லட்டும் பேதைமார் போன்றே னுள்ளம்
அன்பனாய் வாழ மாட்டேன் அதிகைவீ ரட்டனாரே
—திருவதிகைத் திருவீரட்டானம்-திருநேரிசை.

‡ தலக்கமே செய்து வாழ்ந்து தக்கவா றொன்று மின்றி
விலக்குவாரிலாமையாலேவிளக்கதிற்கோழிபோன்றேன்
மலக்குவார் மனத்தி னுள்ளே காலனார் தமர்கள் வந்து
கலக்கநான் கலங்கு கின்றேன் கடவூர்வீ ரட்டனாரே
—திருக்கடவூர்-திருநேரிசை. 5.

¶ பல்லுரைச் சமண ரோடே பலபல கால மெலாம்
சொல்லிய செலவுசெய்தேன் சோர்வனு னினைந்தபோது
மல்லிகை மலருஞ் சோலைத் திருவையா றமர்ந்த தேனை
யெல்லியும் பகலு மெல்லா நினைந்தபோ தினிய வாறே.
-திரு ஐயாறு - திரு நேரிசை. 7—

† ஊனுலா முடைகொ ளாக்கை யுடைகல மாவதென்று
மானுலா மழைக்க ணார்தம் வாழ்க்கையை மெய்யென் [றெண்ணி
நானெலா மிளைய கால நண்ணிலே னெண்ண மில்லேன்
தேனுலாம் பொழில்கள்சூழ்ந்த திருக்கொண்டீச் சரத்துளா [னே
—திருக்கொண்டீச்சரம்-திருநேரிசை. 6.

இளமை கைவிட் டகறலு மூப்பினார்
வளமை போய்ப்பிணி யோடுவ ருதலால்
உளமெ லாமொளி யாய்மதி யாயினான்
கிளமை யேகினை யாக நினைப்பனே
—சித்தத்தொகை-திருக்குறுந்தொகை 28.

திருப்புள்ளிருக்கும் வேளூர்-திருத்தாண்டக முடிவுகளாகிய 'புள்ளிருக்கும் வேளூரானைப் போற்றாதே யாற்றநாள் போக்கினேனே' என்பதை நோக்குக.

பாவிப் பலபலவும் தேடி யோடிப்
பாழாம் குரம்பையிடைக் கிடந்து வாளா
குாவிக் குடிவாழ்க்கை வாழ வெண்ணிக்
குலைகை தவிர்நெஞ்சே கூறக் கேணீ
இரவிக் குலமுதலா வானோர் கூடி
யெண்ணி றந்தகோடி யமர ராயம்
நிரவிக் கரியவனெய்த் தானமென்று
நினையுமா நினைந்தக்கா லுய்யலாமே
3. திருநெய்த்தானம்—திருத்தாண்டகம்

* i மருந்தி னோடுநற் சுற்றமு மாக்களும்
பொருந்தி நின்றெனக் காயவெம் புண்ணியன்
கருந்தடங் கண்ணி னாளுமை கைதொழ
இருந்த வன்கச்சி யேகம்பத் தெந்தையே.
—திருவேகம்பம்-திருக்குறுந்தொகை. 5.

(வேறு)

ii மூப்பி னோடு முனிவுறுத் தெந்தமை
யாப்ப தன்முன் னணியம ரர்க்கிறை
காப்ப தாய கடிபொழி லேகம்பம்
சேர்ப்ப தாகநாஞ் சென்றடைந் துய்துமே.
—திருவேகம்பம்-திருக்குறுந்தொகை 6.

iii அறந்தெரியா வூத்தைவாய் அறிவில் சிந்தை
ஆரம்பக் குண்டரோ டயர்த்து நாளும்
மறந்துமான் திருவடிகள் நினைய மாட்டா
மதியிலியேன் வாழ்வெல்லாம் வாளா மண்மேல்

சைவரானகாலத்தில் விருத்தாப்பியரல்லர். தேகதத்துவங்கள் யாதென்றும் தளராது அக்காலத்தினருக்கு நடுப்பிராயமென்று எண்ணத்தக்க வயதுடையவரென்றே கொள்ளவேண்டும் *. இன்றேல் நூற்றுமுப்பத்திரெண்டு சிவ ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்யச் சக்தியும் ஆயுளும் இரா. † சிவஸ்தலங்களில் மாதங்களும் வருடங்களும் கழித்தனரென்பதற்கு அத்தாட்சிகளும் உள. தற்காலம்போல் யாத்திரானுகூலமான இருப்புப்பாதை முதலிய யந்திரங்கள் அக்காலத்தில் அமையா திருந்தமையாலும், கால்நடையாகவே அப்பர் நாவலந் தீவிலுள்ள திருப்பதிகளைத் தரிசித்தார் என்று நாம் அறிவதாலும், அவர் சமணம் விட்டுச் சைவமதம் மீண்ட காலையில் சுமார் 45 முதல் 50 வயதுடையவராயிருக்கலாமென்று ‡ நாம் அநுமானிக்கலாகும். அத்தகைய முடிவே அப்பர் மொழியாலும் காண்க.

பிறந்தநா ளல்ல வாளா வீசன்
பேர்பிதற்றிச் சீரடிமைத் திறத்து ளன்பு
செறிந்தெழும்பி யூர்மலைமேல் மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப்பெற்றேனே
—திருவெறும்பியூர்- திருத்தாண்டகம் 8.

விளைவறி விலாமை யாலே வேதனைக் குழியி லாழ்ந்து
களைகணு மில்லே னெந்தாய் காமரம் கற்று மில்லேன்
தளையவிழ் கோதை நல்லர் தங்களோ டின்ப மெய்த [னே$
இளையனு மல்லே னெந்தா யென்செய்வான் தோன்றினே

* ஆல மாமயில் சாயல்நல் லாருடன்
சால நீயுறு மால்தவிர் நெஞ்சமே
நீல மாமிடற் றண்ணலே கம்பனார்
கோல மாமலர்ப் பாதமே கும்பிடே
—திருவேகம்பகம் - திருக்குறுந்தொகை. 8.

†. 132. திருப்பதிகள் மேல் பாடிய பாடல்கள் தேவாரத்தில் உள. பல பதிகங்கள் அழிந்துபோனதாய் இன்னும் எத்தனை திருப்பதிகள் பேரில் பாடல்கள்பாடினரோ என்பது சொல்லக் கூடாமையாயிருக்கிறது. உள்ள ஸ்தலங்களின் எண்ணாகிய நூற்று முப்பத்திரெண்டையே எடுத்திருக்கின்றோம்.

‡ விளக்கின்ற வினையை நோக்கி
வெண்மயிர் விரவிமேலும்
முளைக்கின்ற வினையைப் போக
முயல்கிலே னியவ வெள்ளம்
திளைக்கின்ற முடிபி னன்றன் றிருவடி
காண மாட்டா
திளைக்கின்றே னிருமி யூன்றி யென்
செய்வான் றோன்றி னேனே.
—குறைந்த திருநேரிசை 8.

$ குறைந்த திருநேரிசை. 9.

காதலாலோ இராமன் கார்முகத்தை இறுத்தான்?

மறுப்பும் விடையும்.

இப்பத்திரிகையில் ஸ்ரீமான் T. N. சேஷாசலம் ஐயர் வாரந்தோறும் விரிவாக எழுதிவரும் கம்பராமாயணக் கட்டுரைகள் மிக அழகாகவும் நயமாகவும் இருப்பினும், இடையிடையே ஆட்சேபனைக்கிடமான சில அம்சங்களும் காணப்படுகின்றன. அவற்றுள் அகலிகையைப் பற்றி ஐயரவர்கள் கம்பர் கருத்தென எழுதியதொன்று. இவர் கண்டமுடிவு கம்பர் கருத்தாகாதென்பது என்னபிப்பிராயம். அதைப் பின்னொரு சமயம் விளக்கிக்காட்ட நினைத்துள்ளேன். இப்பொழுது நான் விசாரிக்கப் புகுந்தது சென்ற மீ 17உ இதழில், இராமன் சிவன்வில்லை ஒடித்ததைப் பற்றி இவர் கொண்ட கருத்து. அதாவது இராமன் அவ்வில்லை முறித்ததற்குக்காரணம் அது தான் முன்னாள்கண்டு காதலுற்ற சீதையை இஷ்டப்படி அடையவொட்டாமல் இடையே தடையாய் நின்றதென்பது பற்றி அவனுக்கு அதன்மீதெழுந்தகோபமே என்பது.

“காதலால் இராமன் இடைநின்றவில்லை இறுத்து அவளை (சீதையை) எய்தினான் என்று நாட்டும்வகை, வில்லை அவன்காண்பதற்கும், அவ்வில்லைப்பற்றி யாரேனும் ஒரு சொல் இயம்புதற்கும் முன்னமே, இருவரும் ஒருவரையொருவர் கண்டு காமுற்று ஒருங்கிய இரண்டுடற்கு உயிரொன்று ஆகிவிட்ட பெற்றியைச் செவ்விதின் செப்புவாராயினார்.” என்றும், “‘ஆடக மால்வரை’ என்னுந் தொடக்கத்துச் செய்புளில் காதலை நினைத்து இராமன் அவ்வில்லைக் கையில் எடுத்தானேயல்லாது கல்வியை நினைத்தானல்லன் என்னுங் கருத்து அடங்கியுளது.” என்றும், “‘தடுத்திமையாமல்’ என்ற தொடக்கத்துச் செய்யுளால் தம் காதலுக்கு இடையே கிடந்ததெனுஞ் சீற்றத்தால் இராமன் அவ்வில்லை ஒடிப்பதற்கே எடுத்தானோ என்று தோன்றுகின்றது” என்றும் இவர் எழுதி இருக்கிறார். இவ்வாறு சமத்காரமாக இவர் புனைந்துரைப்பதற்கு அடிப்படையாகவும் ஆதாரமாகவும் இருப்பது, மிதிலையின் வீதிவழியே முதல்நாள் இராமன் போகும்போது தான் கண்டு காதலுற்ற பெண், ஜனகன் மகளாகிய சீதையென்று அவனுக்குத் தெரியும் என்று இவர் கொண்டுள்ள தப்பபிப்பிராயமே.

இராமன் மிதிலாநகரத்துட் பிரவேசித்து அதன் விநோதங்களை யெல்லாம் பார்த்துக்கொண்டே தம்பியுடன் விசுவாமித்திரரைப் பின் தொடர்ந்து ஒரு வீதியின் வழியே போகும்போது ஒருய்யானவனத்தைக் கண்டான், அதற்கப்பால் அரசனுடைய பொற்கோயிலின் பொன் மதிலைச்சூழ்ந்த அகழியைக்கண்டான், அதனயலே ஒரு மாடத்தினும்பர்ப்பேடுகளோடு அன்னமாடும் முன்துறையொன்றைக் கண்டான், அங்கே தந்நேரில்லாப் பல் மங்கையர் குழாத்தின் நடுவில் சதகோடி மின்சேவிக்க நின்ற மின்னரசென்னத்தக்க பெண்மணியொருத்தி, தன்னழகைக் கண்டு குன்றுஞ்சுவருந் திண்கல்லும் புல்லும் உருக நின்றாளைக் கண்டான். இராமன் அவளைக் கண்ணிமிர்ந்து பார்த்தான், அதேகாலத்தில் அவளும் இவனைப் பார்த்தாள். இருவருள்ளமு முயிரும் ஒன்றும்படி ஒருவரிடத்தொருவர் காதல்கொண்டார். இவையெல்லாம் ஒருகண நிகழ்ச்சி; அவ்வளவே. உடனே இராமன் முனிவன் பின்னோடு அப்பாற் போய்விட்டான். அன்றிரவெல்லாம் தன் கண்ணைக்கவர்ந்து கருத்தையழித்து, உள்ளத்தைத் திறைகொண்ட பெண்ணரசி யாவளோ, அவளை இன்னுமொருமுறை காணலாகுமோ, அவள் மணமாகாக்கன்னிகையோ அல்லளோ, என்று பலவாறு சிந்தித்து நொந்து சஞ்சலமுற்றப் பிறகு,

ஏகு நல்வழி யல்வழி என்மனம்
ஆகுமோ? அதற் காகிய காரணம்
பாகு போன்மொழிப் பைந்தொடி கன்னியே
ஆகும். வேறிதற் கையுற வில்லையே.
(மிதிலைக். 147)

[தூயநெறியை விட்டு மயிரிழையும் விலகிச் செல்லாத என் நன்மனம் இவ்வாறு முன்பின்னறியாத யாதோவொரு பெண்ணைத் தற்செயலாய்க்கண்டு காதல்கொண்டு ஈடழிந்து நிலை குலைந்து தடுமாறுமா? ஒரு காலுந் தடுமாறாது. ஆதலால் இவள் என் காதலுக்குரிய மணமாகாக் கன்னியாகத்தான் இருத்தல் வேண்டும்]

என்று நிச்சயித்தான். அதுவன்றி அவளை இன்னாளென்று அவனறியவில்லை, அறிந்துகொள்வதற்கு இடமுமில்லை. யாரைக்கேட்டுத் தன் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்வான் அவன்? கோசிக முனிவரையா?

இவ்வாறே சீதையும் தன்னைக்கண்ணுற்று நோக்கி உள்ளத்தைக் கவர்ந்துகொண்டு சென்ற கள்வன் இன்னானென்று அறியாளாய்க் கலங்கி, அவனைப் பின்னுமொருமுறைக் காணப்பெறும் பாக்கியம் தனக்குக் கிடைக்குமோ என்றேங்கி இரவெல்லாம் விரகவேதனையுற்று வருந்தி, இறுதியில்

உரைசெயில் தேவர்தங் குலத்து ளானலன்,
விரைசெறி தாமரை இமைக்கு மெய்மையால்;
வரிசிலைத் தடக்கையன், மார்பி னூலினன்
அரசிளங் குமரனே ஆதல் வேண்டுமால்.
(மிதிலைக். 58)

[தாமரையிதழ் போன்ற இவன் கண்கள் இமைத்தமையால் உத்தமபுருஷ லக்ஷணங்களெல்லாம் ஒருங்கமைந்த இவன் ஒரு தேவன் அல்லன்; மனிதன்தான். கையிற் கட்டமைந்த வில்லொன்று இருப்பதாலும், மேகத்தினிடை மின்னலைப் போல் மார்பில் பூணூல் விளங்குவதினாலும், இவன் ஓரரசிளங்குமாரனாகத்தான் இருத்தல் வேண்டும்]

ஆதலால் இவன் தான் கணவனாக அடைதற்குரியவனே என்று தன் மனதைத் தேற்றிக்கொண்டாள்.

இந்த நிலைமையில் இராமன் மறுநாட்காலையில்எழுந்ததும், அவனையுந் தம்பி இலக்ஷ்மணனையும் அழைத்துக்கொண்டு விசுவாமித்திரர் மிதிலையர்கோமான் வேள்விச்சாலையைச் சார்ந்தார். இவ்விரு குமாரரும் யாவரென்று கேட்ட ஜனகனுக்குத் தயரதன் புதல்வரென்று கூறி அவர் விருத்தாங்களையெல்லாம் விரிவாக விளம்பி, வில்லைக்காணும் விருப்பத்தோடு வந்துள்ளாரென்று சொன்னார். உடனே வில்லைக் கொணரும்படி அரசன் ஆஞ்ஞாபித்தான். அது வந்ததும் சதாநந்தர் அதன் வரலாற்றையும், சீதையின் வரலாற்றையும், அதை வளைத்தவனே ஜானகியை மணமகளாகப் பெறுவதற்குரியான் என்று தாங்கள் ஏற்பாடு செய்ததின் காரணத்தையுங் கூறினார்.

நினைந்தமுனி பகர்ந்தவெல்லாம்
நெறியுன்னி அறிவனுந்தன்
புனைந்தசடை முடிதுளக்கிப்
போரேற்றின் முகம்பார்த்தான்
வனைந்தனைய திருமேனி
வள்ளலுமம் மாதவத்தோன்
நினைந்தவெல்லாம் நினைந்தந்த
நெடுஞ்சிலையை நோக்கினான்.
(கார்முகப் - 25)

[பூதபௌஷிய வர்த்தமானங்களையெல்லாம் நன்குணர்ந்த சதாநந்தர் சொல்லியவற்றையெல்லாம் முற்றிய அறிஞராகிய விசுவாமித்திர முனிவர் செவ்விதாக ஆலோசித்து ஆமோதித்துத் தன் சடைமுடியை அசைத்துப் போர்வீரனான இராமன் முகத்தைப் பார்த்தார். அப்பார்வைக் குறிப்பால் அவருடைய உள்ளக்கருத்தையெல்லாம் உடனே உணர்ந்த அழகனும் அந்தப் பெரியவில்லைப் பார்த்தான்.]

உடனே

பொழிந்தநெய் யாகுதிவாய்வழி பொங்கி
எழுந்தகொழுங் கனலென்ன எழுந்தான்,

[ஓமாக்கினியை மூட்டி அதில் நெய்யை ஆவுதி செய்தவுடன் அதன் வழியே அக்நெருப்புச்சுவாலை யெழுவது போல எழுந்தான்.]

எழுந்து

மாக மடங்கலும் மால்விடையும் பொன்
நாகமும் நாகமும் நாண நடந்தான்,

வில்லையொரு பூமாலையென்ன எடுத்தான். நாணியைக் குதையிற் பூட்டுவதற்காக அதைத் தாளின் மடுத்து வளைத்தான். அப்பொழுது அது ஒடிந்தது. இதுதான் இராமன் சிவன் வில்லை இறுத்த வரலாறு.

இங்கே இந்தச் சமயத்தில் சதாநந்தர் சொன்னதைக்கொண்டு தான் வில்லைவளைத்து நாணேற்றிவிட்டால் ஜனகன் மாமகளாகிய சீதையை மணமகளாகப் பெறுவதற்குத்தான்உரியவனாவான்என்பதொன்றுமே இராமனுக்குத் தெரிந்ததன்றி, இவள்தான் முன்னைநாள் தான் கண்டு காதலுற்றவள் என்று அறிந்துகொள்ளுவதற்கு யாதொரு ஏதுவுமில்லை. ஆனால் அப்பெண்ணைத் தான் அரசன் பொற்கோயிலுக்கருகே சிறந்துவிளங்கியதொரு மாளிகையினும்பர் பல பெண்கள் சூழ்ந்து நிற்கக் கண்டானாதலினாலும், அவள் வனப்புக் கண்கொள்ளாக் காட்சித்தாய் இருக்கக்கண்டானாதலினாலும், சீதையைச் சாதாநந்தர் வருணித்துரைத்தபோது

“அழகிவளைத் தவஞ்செய்து பெற்றதுகாண்,[யெனும்
கணங்குழையா ளெழுந்ததற்பின், கதிர்வானிற்கங்கை
அணங்கிழியப் பொலிவிழந்தஆறொத்தார் வேறுற்றார்.

[உத்தம குணங்களெல்லாம் நிறைந்த இந்தச் சீதையைத் தான் அடைந்து அவளால் தான் பெருமையைப் பெற வேண்டுமென்று நினைத்து, ‘அழகு’ என்று நாம் எதைச் சொல்லுகிறோமே அதுவே பெருந்தவம் புரிந்து இவளைப் பெற்றது என்று சொல்லத்தகும். எப்படி ஆகாசத்திலிருந்த கங்கை பகீரதன் பிரயத்தனத்தால் கீழிறங்கிப் பூமியில் வந்ததும், முந்திச் சிறப்புற்று விளங்கிய நதிகளெல்லாம் அதனெதிரே தம்பொலிவழிந்தனவோ அப்படியே இந்தச் சிதை இங்கேதோன்றியபின் அதற்குமுன்போழகியரென்று பிறங்கியவரெல்லாம் இவளெதிரே பொற்பிழந்தவராயினார்]

என்று சொல்லக் கேட்டதினாலும், நிகரற்ற அழகு நிரம்பிய பெண்மணிகள் இருவர் ஓரூரிலிருப்பது அசம்பாவிதமாகையால் இவ்விருவரும் ஒருகால் ஒருத்தியாகவே இருக்கலாமென்று இராமன் அநுமானித்திருத்தல்கூடும். ஆயினும் அது அநுமானமேயன்றி நிச்சயமன்று. அவள்தான் இச்சீதையோ அல்லளோ என்ற சந்தேகம் அவன் மனதை விட்டு அகலவில்லை. உண்மையைத்தெரிந்து அதைத் தீர்த்துக்கொள்ளும் வகையொன்றும் அவனுக்குத்தோன்றவில்லை. பிந்தி இராமனுக்கும் சீதைக்குங் கலியாணம் நிச்சயமாய்த் தசரதன் முதலாயினோர் அயோத்தியிலிருந்து மிதிலைக்கு வந்து, எல்லாரும் ஒரு மாமணி மண்டபத்திலிருந்தபோது, சீதையை அழைத்துவரும்படி வசிஷ்டர் ஜனகபூபதிக்குச்சொல்ல,உடனே சர்வாபரண பூஷிதையாய்த் திவ்யாலங்காரத்தோடு சீதை

விற்றவழ, வாணிமிர, மெய்யணிகள் மின்ன -
சிற்றிடை நுடங்க, ஒளிர்சீறடி பெயர்த்து -
(கோலங் - 27)

மன்னவையிருந்த மணிமண்டபம் வந்துற்றாள். அப்பொழுது தான் வில்லை முறித்த நாள்தொட்டுத் தன் மனத்திடைக் கிடந்த சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ளும்பொருட்டு அவன் அவளைக் கண்ணிமிர்ந்து பார்த்தான். பார்த்து, அவளேதான் கன்னிமாடத்திற்கண்ட கன்னியாக இருக்கக்கண்டு சஞ்சலமொழிந்து பெருங்களிப்புற்றான்.

அன்னவளை அல்லளென ஆமென அயிர்ப்பான்
கன்னியமிழ்தத்தை எதிர்கண்ட கடல்வண்ணன்
உன்னுயிர் நிலைப்பதோர் அருத்தி கொடுழைத்தாண்
டின்னமிழ் தெழக்களிகொள் இந்திரனை ஒத்தான்.
(கோலங்காண் - 30)

[அவ்வாறு அங்கு வந்துற்ற ஜனகன் மகளாகிய சீதையைத் தான் முந்திக் கன்னியாமாடத்திற் கண்ட காரிகை இவள்தானோ அல்லளோ என்று ஐயுற்றுத் தெளியாதிருந்த இராமன், அக்கன்னியாகிய அமிழ்தமே சீதையாகத் தன்னெதிரே தோன்றக்கண்டு, நீங்குமுயிரை நிலைநிறுத்தி, என்றும் அழியாமலிருக்கச் செய்யும் விருப்பத்தால் வெகு சிரமப்பட்டுக் கடலைக் கடைந்தபோது அமிர்தம் அதினின்றும் எழக்கண்டு களித்த இந்திரனை ஒத்தான்]

இவ்வாறே சீதையும் இராமன் வில்லை முறித்துத் தன்னை மணம்புரிந்துகொள்வதற் குரியவனான சமா

சாரத்தைச் சந்தோஷத்தோடு ஓடிவந்து தன்தோழியாகிய நீலமாலை தனக்கு அறிவித்ததும், தனது மனமுழுதும் முன்னாள் வீதிவழியே போகக்கண்ட கார்மேகவண்ணனிடத்தே சென்றுவிட்டபடியால் இனி என்செய்வதென்று ஏக்கமுற்றிருந்தவள், அவ்வில்லை முறித்தவன் தசரத சக்கரவர்த்தியின் புதல்வனென்றும், 'கோமுனி பின்வரு கொண்டல்' என்றும் நீலமாலை சொன்னதும், ஒருக்கால் அவனே இவனாக இருக்கக்கூடுமென்று அனுமானித்து ஐயுற்று அதன்பின் அவன் "தாமரைக்கண்ணினன் என்ற தன்மையால், ஆம் அவனே கொல்" என்று அவ்வையத்தை விடலுற்றாள். ஆயினும்,

> "சொல்லிய குறியின்இத் தோன்ற லேஅவன்
> அல்லனேல் இறப்பலென் றகத்துளுன்னினாள்"
>
> (கார்முகப்—63)

என்றமையால் அச்சந்தேகம் அடியோடு நீங்கிற்றென்று நினைப்பதற்கு இடமில்லை. பின்பு மண்டபத்திடை வந்தபோது தான் இராமனை நேரிற் பார்த்த பிறகுதான் அது முற்று மொழிந்தது.

> எய்யவில் வளைத்ததும் இறுத்ததும் உரைத்து
> மெய்விளை விடத்து முதலையம் விடலுற்றாள்
> ஐயனை அகத்துவடி வேயல புறத்தும்
> கைவளை திருத்துபு கடைக்கணி னுணர்ந்தாள்.
>
> கருங்கடை நெடுங்கணொளி யாறுநிறை கண்ணப்
> பெருங்கடலின் மண்டஉயிர் பெற்றினி துயிர்க்கும்
> அருங்கலன ணங்கரசி ஆரமிழ் தனைத்தும்
> ஒருங்குட னருந்தினரை ஒத்துடல் தடித்தாள்.
>
> (கோலங்—37, 38)

[நாணியைப்பூட்டி அம்பை எய்யமாறு இராமன் வில்லை வளைத்ததையும் முறியச் செய்ததையும், நீலமாலை உரைக்கக்கேட்டு உண்மையை ஒருவாறுணர்ந்து முந்தித் தான் கொண்டிருந்த ஐயத்தை விடலுற்ற சீதை, தன்மனதைவிட்டகலாது உள்ளேதோன்றும் இராமனது உருவத்தையன்றி வெளியே கண்ணால்பார்க்கும் அவன் வடிதத்தையுங் காணுமாசையால் தன்கைவளையைத்திருத்துபவள்போலஒருபுறந் தலைகுனிந்து கடைக்கண்ணால் இராமனைப் பார்த்தாள்; பார்த்துஅவனே முன்னாள்தான் கண்டவனென்றுஉணர்ந்தாள். தனது விசாலமான கண்ணின் கடைப்பார்வையாகிய ஆறு இராமனது கரிய திருமேனியின் சௌந்தரியப் பெருங்கடலிலே பாய்ந்ததும்,இவன் அவனல்லனாகில்உயிர் துறப்பலெனத் துணிந்த சீதை உண்மையையறிந்து, உயிர்பெற்று, தடைப்பட்டுத் தங்கிய மூச்சு மீளவும் சரியானபடி இயங்கப் பெற்று, பெறுதற்கரிய தேவாமிர்தத்தை யெல்லாம் ஒரே தடவையில் பருகப் பெற்றவரைப்போல உடல் பூரித்தாள்.]

ஆகையால் இராமன் தான் கன்னியாமாடத்திற் பார்த்த பெண் ஜனகன் மகளாகிய சீதையென்றே அறிந்திருந்தான் என்றும், அதனாற்றான் அவளை அடைவதற்குத் தடையாகக் குறுக்கேகிடந்த அவ்வில்லை ஆத்திரத்தோடெடுத்து வலங்கொண்டு வளைத்து முறித்தெறிந்தான் என்றுஞ் சொல்வது பொருந்தாது.

அஃதேல், இவ்வாறு முதல்நாள் ஒருத்தியைக் கண்டு அவளிடத்து மெய்க்காதலுற்று முழுமனதையுங் கொடுத்துவிட்ட இராமன் மறுநாள் அவளை முற்றுமறந்து சதாநந்தர் வருணித்துச் சொல்லக் கேட்ட ஜானகியை விருப்புற்று வில்லை வளைத்து அவளைப் பெற விரும்புவானா, முற்படுவானா?

> இந்த இப்பிற விக்கிரு மாதரைச்
> சிந்தை யாலுந் தொடேனென்ற
>
> (சுந்தர-சூளாமணி - 34)

செம்மை யுள்ளத்தனாகிய இராமன் இவ்வாறு செய்திருப்பானாயின், உணர்வு சென்றுழி உள்ளத்தைச் செலுத்துஞ் சீவகன்போன்ற ஓர் இடங்கழிகாமி ஆவனே யன்றிப் பெரிதும் உத்தமனாதலுண்டோ, என்ற ஆசங்கை உண்டாகும். ஆதலால் சீதையைக் காதலித்தாவது, அவளைப்பெறும் இச்சையினாலாவது, அவ்வில்லை அவன் வளைக்கலுற்றான் அல்லன். தனது குலமுதல்வர் வெற்றிப் பிரதாபங்களையும், தனது வில்லாற்றலையும் வீரத்தையும் பலவேந்தர் முன்னிலையில் புகழ்ந்துரைத்த விசுவாமித்திரர்வில்லையெடுத்து வளைக்கும்படி ஏவிய குறிப்பை உணர்ந்த இராமன் உடனே அதைச்செய்ய எழுந்தது தனது வீரத்தையும் தனுர்சாமர்த்தியத்தையும் யாவர்க்குங் காட்டவேண்டுமென்னும் அரசிளங்குமரர்க்குஇயற்கையான எண்ணத்தால்தான். ஆனால்,தான் சிறிது சந்தேகித்தவாறு இச்சீதையே முந்தித்தான் காதலுற்ற கன்னியாயிருந்தால் முறைப்படி அவளை மணம்புரிந்துகொள்கிறது, அன்றேல் எப்படியாவது பிந்தி அதை மாற்றி விடுகிறது, என்ற தீர்மானத்தோடேதான் அவன் அச்செயலுக்கு உடம்பட்டிருத்தல்வேண்டும்

அவ்வில்லை முறித்ததனால் சீதையைப் பெறுவதற்கு அவன் உரியவன் ஆனானேயன்றி எது எப்படியிருந்தாலும் அவளைத் தான் மணந்தே தீரவேண்டும் என்ற நியதி இல்லை. அவள் சம்மதத்தைப் பெற்று வேறொருவனுக்கு அவளை மணஞ்செய்து வைத்தாலும் வைக்கலாம், அன்றி அவள் நோக்கம் வேறிடத்திலிருப்பதாகத் தெரிந்தால் அதற்குத் தான் சம்மதித்தாலுஞ் சம்மதிக்கலாம். நிரையை மீட்டுத் தான்பெற்ற நந்தகோன் மகள் கோவிந்தையைச் சீவகன் தன்தோழன் பதுமுகனுக்கு மணஞ்செய்து வைக்கவில்லையா? பீஷ்மன் 'முறையினாலன்றி மொய்ம்பிற் கவர்ந்த' காசிராசன் மகள் மூவரில் அம்பிகையும் அம்பாலிகையையும் தன்தம்பி விசித்திரவீரியனுக்கு விவாகஞ்செய்து வைத்துமற்றைஅம்பையின் மனம்சாலுவன்மேல்அமர்ந்திருந்ததை அறிந்து அவனைமணஞ்செய்து கொள்ளுமாறு அவளை அவனிடம் அனுப்பிவிடவில்லையா? தனது வில்வீரத்தினால் விசயன்பெற்ற திரௌபதியை அன்னை சொல்லால் ஐவரும் வதுவையாற்றிக்கொள்ளவில்லையா? உளங்கோடல் தனையிழைத்தாள் வேறொருத்தி உளளாயின், இளங்கோவுக் கிவளைமணம் இசைவித்தல் ஏலாதோ?

இவற்றையெல்லாம் நன்காலோசித்து ஸ்ரீமான் சேஷாசலம் ஐயர் தங்கருத்தை மறுமுறை ஆராய்வாராக.

விடை.

["இதனிற்கு விடையுளதேல் வரைக" வென்று இக்கட்டுரையை நாம் ஸ்ரீமான் T. N. சேஷாசலம் ஐயருக்கு அனுப்ப, அன்னார் விடுத்த விடை பின்வருமாறு. ஆசிரியர்.]

இராமனை எக்கருத்துக்கொண்டு கம்பர் அம்மாயவில் இறுக்கவைத்தாரென்பது வெளிப்படையாயிராததால், அதனை ஊகித்து 'இவ்வாறு இருப்பினும் இருக்கலாம்' என்று காட்டவேண்டியது நான் மேற்கொண்ட கருமத்தின் கடனாயிற்று. பற்பல சமயங்களில் நம்முடைய கருத்து இன்னதென்று ஐயமறத் திண்ணமாய்உணர்ந்துகொள்ள நாமேஇயலாதவர்களாயிருக்கின்றோமென்பது அனுபவம். எனின்,ஓர் கவியினுடைய கருத்தை, அவர்தம் நூலில் உரைத்துள சில சொற்களைக்கொண்டும், உரையாதுவிட்ட சில விஷயங்களைக்கொண்டும், ஒருவாறு ஊகித்துச் சான்றுகளின் மிகையினால்"இது இவ்வாறு இருப்பதமையும்" என்று இயம்புவதல்லால், அதுவே 'சரி' யென்று சாதிப்பதேனும், இது தப்பேதான் என்று வாதிப்பதேனும் இரண்டும் ஏற்புடையதாகாததன்றி, அவசியமுமில்லை. கௌசலை இராமனைப் பெற்றாள், இராமன் சீதையை மணந்தான், சீதையை இராவணன் இலங்கைக்குத் தூக்கிச்சென்றான், என்பனபோன்ற விஷயங்கள் அடங்கிய செய்யுள்களை இயம்பி, "ஆதலால், கௌசலையினுடைய மகன் இராமனன்றோ! இராமனது மனைவி சீதை யென்பதற் கையமில்லையே! சீதையைக்கவர்ந்து அவ்வரக்கன் சென்றது இலங்கைக்கே!" என்று முடிவுகட்டிக் கட்டுரை தேருங்காலையிற்றான் நிர் ஆட்சேபனையான விஷயங்களை விளம்புகின்ற சுலபம் வாய்க்கும். மற்றுத் தெற்றெனத் தோன்றாமல் கவியினதுஉள்ளக்கிடக்கையை ஊகித்துணரவேண்டி நேர்கின்ற வேளைகளில், அது இவ்வகைத்தோ அவ்வகைத்தோவென இருவகைக்கும் ஒருவாறு இடந்தந்து நிற்குமெனின், எவ்வகைத்தாயின் அழகும் இன்பமும் சிறக்குமெனச் சிந்தித்து, அன்னதற்குளவாகிய ஆதாரங்களை எடுத்துவிளக்கி, எதிராகத் தோன்றும் முரண்களைக் காட்டியழித்து, முடிவு கூறல் முறையென இலக்கியத்தின் இயல்மதிக்கும் சாத்திரவல்லுநர் இயம்புவார். அம்முடிவு, இபல்வதாயிருக்கின்ற வேறு சில முடிவுகளைக்காட்டிலும் கவியினது அழகை மிகுவிக்கும் தன்மை வாய்ந்ததோடு யுத்திக்கும் அனுபவத்திற்கும் தர்க்கத்திற்கும் செய்யுளிலுள்ள சொற்களுக்கும் இணங்கியதாயின் அதுவே ஏற்றுக்கொள்ளற் பாலது.

ஆயின், கார்முகத்தை இராமன் இறுப்பதற்கு எப்திய ஊக்கம் யாதெனக் கம்பர் கருதினாரெனவினவுழி, அது காமத்தாலாதல் கல்வியினாலாதல் விளைந்திருத்தல் வேண்டுமென்பது தெரிகின்றது. வான்மீக முனிவர் வகுத்தபடி இராமன் யார்மீதுங் காதல் கொள்ளுமுன்னரே வில்லிறுக்க நேர்ந்ததாதலால் அங்குஅவன் தன் சிலைத்திறங் காட்டுமாறே அக்கருமஞ் செய்தனன் என ஒருதலைத் துணிந்துவிடலாம். கம்பரிலோ கார்முகச் செய்தி கழறவும்பெறுமுன் இராமன் ஒருத்தியைக் கண்ணுற்றுத் தனதுள்ளமும் உணர்வும் அவள்பால் துறந்தவனைப் நிற்கக் காண்கின்றோம். ஆதலின் இங்கு இராமன் காதலால் அக்கார்முகத்தைக் கையில் எடுத்து வளைத்தலுங்கூடும். வீரத்தால் விம்மிச் சென்றிச் சாகசஞ்செய்தான் என்பதைக் காட்டிலும், இராமன் உழைக்கும் அக்காதலை இக்கார்முகத்தோடு இணைத்து இயம்புதல் அழகுடைத்தெனநினைத்தேன். கம்பரே வெளிப்படையாக வொருசெய்யுள், கன்னிமாடத்திற் கண்டவளை இவ்வில்லிற்கு உரித்தாய சீதை என இராமனறிந்து காதல் கைம்மிக அவ்வில்லினை யெடுத்தான் என்று பொருள்படப் பாடியிருப்பாராயின், இராமனது மொய்ம்பின் நிலைவிற்கு அது பழுதாயமைந்திருக்கும் என்று யாவருங் குறைகூறுவர். ஆதலின் சிலைவளைக்கும் இந்நிலையில் இராமனது வீரத்திலும் காதலைச் சிறப்பித்து வைத்தலே தகுதியுடைத்து. கார்முகப்படலத்தை ஓதுவோர் இராமனது புயவலியைக் காட்டிலும் அவனது மனநிலையில் ஈடுபட்டிருப்பார்.

மற்றுக் கம்பர் வெளிப்படையாக இயம்பியிலராயினும், அழகிற்கு இடந்தரும் இக்கருத்து அவரது கருத்தாய் இருக்கவேண்டுமென எண்ணுவது இயற்கையாயிற்று. ஆயின் அவ்வகை எண்ணுதற்கு இக்கவியினுள் குறிப்புக்கள் உளவோ என்று சிந்திக்குமுன், இதற்குமாறாக 'இராமன் தோள்வலி காட்டவே தனுவைத் தூக்கினான்' என்று வெளிப்படையாகவேனும் ஐயமற்ற குறிப்பினாலேனும் காட்டுகின்ற செய்யுள்கள் இருக்கின்றனவோ என்று ஆராய்தல் வேண்டும். அப்பரிசு பொருள்படுஞ் செய்யுள் ஒன்றுமிலது. எதிர் நின்று மறுக்கவல்ல பாசுரம் யில்லையெனில், இனி உடன்நின்று உதவுகின்ற செய்யுள்களின்பால் ஊக்கஞ் செல்லலாகும். அவ்வண்ணம் உதவுகின்ற செய்யுள்களையும் அவை எவ்வாறு உதவுகின்றனவென்பதையும் முன்னர் என் முதற்கட்டுரையில் காட்டியுள்ளேன். வான்மீகத்தில் சொல்லியிருப்பதுபோல் இராமன் அவ்வில்லை வெகுநேரம் வைத்துக்கொண்டு பாராட்டாமல் எடுத்தவுடன் உடைத்த வேகமும், "சீதையெனும் பொன் சூடகவால்வளை சூட்டிட நீட்டும் எடவிழ் மாலை இதென்ன எடுத்தான்" என்ற கவியினது கூற்றும், சீதையை நினைவிற்கொண்டே இராமன் சிவன்வில்லைக் கையிலெடுத்தான் என்னுங் குறிப்பைத் தருகின்றன. இதனைத்தான், "இவ்வாறு சமத்காரமாக இவர் புனைந்துரைப்பதற்கு அடிப்படையாகவும். ஆதாரமாகவும் இருப்பது,மிதிலையின்வீதிவழியே முதல்நாள்போகும்போது தான் கண்டு காதலுற்ற பெண் ஜனகன் மகளாகிய சீதை யென்று அவனுக்குத்தெரியும் என்று இவர் கொண்டுள்ள தப்பபிப் பிராயமே" என்று ஸ்ரீமான் இராமரத்நம் ஐயர் ஏற்பதற்கு இசைந்திலர்.

ஆயினும், இவ்விருமாதரும் வேறு வேறு என இராமன் எண்ணினான் என்பதற்கு ஐயரவர்கள் ஆதாரம் காட்டவில்லை. அதற்குமாறாக, இருவரையும் ஒருவரென்றே இராமன் உன்னினான் என்பது கம்பர்தம் கருத்தென்று நான் கொண்ட கொள்கை ஐயரது மறுப்புரையால் பின்னும் பலப்படக் காண்கின்றேன். இது என்னுடைய தப்பு அபிப்பிராயமாயிருந்தால் ஸ்ரீமான் ஐயரவர்கள் என்னுரையைமறுக்க முயன்ற முயற்சி மிகவும் சுலபமாய் முற்றுப்பெற்றிருக்கும். அது கம்பருடைய கருத்தாயிருப்பதாற்றானே அதனை மறுக்கவந்த ஐயரவர்களும் தன்னையறியாமலே அதற்கு வயமாகி நிற்கும் பெற்றியராயினர். ஏனெனில், கண்டநிலையையும் சதாநந்தர்உரையையுங் கொண்டு, "இவ்விருவரும் ஒருகால் ஒருத்தியாகவே இருக்கலாமென்று இராமன் அனுமானித்திருத்தல் கூடும்" என்று ஐயரவர்களும் ஒப்புக்கொள்கின்றனரே. நானும் அதைத்தான் சொன்னேன். பின் என்பால் எப்பிழைகண்டார்! எனினும் இவ்வாக்கியத்தின் மேல், "ஆயினும் அது அனுமானமேயன்றிநிச்சயமன்று, அவள்தான் இச்சீதையோ அல்லளோ என்ற சந்தேகம் அவன் மனதைவிட்டகலவில்லை" என்று தொடர்கின்றார். நிச்சயந்தானென்று யாவராற் சொல்ல இயலும்! ஆனால், பல பிரமாணங்களால் ஒரு விஷயத்தை நிச்சயம் செய்தல்கூடும் எனினும், எந்தப் பிரமாணத்தாலும் சந்தேகம் என்பதே இல்லாத நிச்சயம்என்ற ஒன்றை எய்துதல் மனிதர் மனதிற் கியலாது. கண்ணாற் கண்டதையும் நம்புதற்கஞ்சி 'இதுகனவோ' என அயிர்க்கின்றார் சிலர். அனுமானப் பிரமாணத்தால் எய்துவதும் நிச்சயமே; ஆனால் மற்றெல்லா நிச்சயங்களைப்போல் அதுவும் சந்தேகத்தோடு சேர்ந்திருப்பினுமிருக்கலாம். கடவுளின் நிச்சயமும் அவ்வாறே அமைந்திருக்கின்றது. ஆதலின் ஓரளவு ஐயம் கலந்திருப்பதினாலேயே முடிவின் நிச்சயம் மறுக்கப்படுவதில்லை. இராமனது மனதில் சந்தேகம் இருந்ததென்று உரைத்த மாத்திரையிலேயே, அவ்விருவரும் ஒருத்தியே என்ற துணிவும் ஓரளவு இருத்தல்வேண்டுமென்பது ஏற்படுகின்றதே. கன்னிமாடத்திற் கண்ட நங்கையும், பின் மண்டபத்திற் சதானந்தரால் உரைக்கக்கேட்ட நங்கையும் ஒருத்தியே என்று இராமனது உள்ளுணர்வு தூண்ட அதனால் எய்தவல்ல நிச்சயத்தினளவு அவன் எய்தி யிருந்தான்.

இதனையும், மானுட மனதிற்குரிய துணிவின் வகை இன்னதென்று நான் முன்னிங்குரைத்ததையும், ஸ்ரீமான் இராமரத்நம் ஐயர் அவர்கள் தம் மறுப்புரையில் எடுத்தாண்டிருக்கின்ற செய்யுள்களிலிருந்தே காட்ட இயலும் என நினைக்கின்றேன்.

கன்னிமாடத்தினின்று கண்ணுற்ற இராமனுஞ் சீதையும் பிரிந்தவுடன் அவ்விருவரும் தனித்தனி கொண்டு தெளிந்த ஐயத்தின் தன்மையை ஐயரவர்கள், நூலினின்று எடுத்துக்காட்டுகின்றார். தன்காதல் நாடிய அப்பெருமகனை மணங்கொள்ளற்குச் சாதி குலம் முதலிய இடையூறு யிருக்குமோவென்று அயிர்த்த சீதை, மார்பில் நூலும் கையில் வில்லும் சேர்ந்து தரித்திருந்ததால் அந்தணனாகவேனும், வேடனாகவேனும் இல்லாது அவன் ஓர் க்ஷத்திரியனாகவே இருத்தல் வேண்டுமெனத் துணியலாயது அவளுக்கு முறையாயிற்று. இராமனோ,

> **எகு நல்வழி யல்வழி யென்மனம்**
> **ஆகு மோவதற் காகிய காரணம்**
> **பாகு போன்மொழிப் பைந்தொடி கன்னியே**
> **ஆகும் வேறிதற் கையுற வில்லையே**

எனத்தேர்ந்தான். இவள் அரசிளங்குமரியே என்றநிச்சயம் பெரும்பான்மை அவன் மனதில் ஏற்பட்டிருந்ததாற்ருன், தான் மணஞ் செய்தற்குரியகன்னியோ அல்லளோ என்ற மட்டில் இத்தருணம் நினைக்கலாயினுன். மிதிலா நகரக் கன்னிமாடத்தில், தாமே மின்னலெனத் தக்க வடிவமைந்த மாதர் எண்ணிறந்தோர் சேவிக்க நின்றவளை அந்நகர் மன்னன்மகள் என்று எண்ணுவது யாவருக்கும் இயற்கை. ஸ்ரீமான் ஐயரவர்கள் இச்செய்யுளைச்செப்பி,"ஆதலால் இவள் என்காதலுக்குரிய மணமாகாக் கன்னியாகத்தான் இருத்தல்வேண்டும், என்று நிச்சயித்தான். அதுவன்றி அவளை இன்னுளென்று அவனறியவில்லை; அறிந்து கொள்வதற்கு இடமுமில்லை. யாரைக்கேட்டுத் தன் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்வான் அவன்? கோசிக முனிவரையா?" என்று முடிக்கின்ருர். கன்னி என்பதை மாத்திரம் எப்படி நிச்சயித்தான்? தன் மனச்சாட்சி நெறிபிறழாதென்றதை ஆதாரமாகக்கொண்டு எய்திய அனுமானத்தினுல்தானே! அதே அனுமானத்தால் தோன்றிய ஆதாரங்களைக்கொண்டு இவள்தான் ஜனகன்மகள் என்று நிச்சயித்திருந்தாலும் அமையாதோ? அவள் கன்னிதான் என்பதை அனுமானத்தால் கொண்டானல்லாது, "இதற்கு ஐயுறவு இல்லையே" என்னும் வண்ணம் யாரைக்கேட்டுத் தெரிந்துகொண்டான். மற்று அவள், "பாகுபோல் மொழியாள்" என்பது இராமனுக்கு எவ்வாறுதெரியும்! கோசிக முனிவரை கேட்டதனைத் தெரிந்துகொள்ள வில்லையே? உண்மையாதெனில், உள்ளுணர்வு (instinct) என்பதொன்றிருக்கின்றது. அவ்வுள்ளுணர்வு சிற்சில செய்திகளை, நாமறிந்துகொள்ள இடமில்லை என்று நினைக்குமிடங்களிலும், அறிவுறுத்திவைக்கும். அநுமானத்தால் இவள் மன்னன்மக்கள் என்பதை ஏற்கனவே ஒருவாறு துணிந்துகொண்டான். அனுமானத்தால் உணரவியலாத அவள் கன்னி நிலையையும் குாலினினிமையும் உள்ளணர்வு அவனுக்கு உரைக்கின்றது.

இனி, தான் கன்னிமாடத்தினின்று கண்ணுற்ற காளையும்பின்னுள் வில்லிறுத்தவீரனும் ஒருவனேயோ அல்லனோவென்று சீதை கடைவரையில் ஐயங்கொண்டிருந்தனள் என்பதற்காகிய செய்யுள்களை ஐயரவர்கள் காட்டுகின்ருர். அவைகளை ஆராய்தல் இவ்விடையுரைக்கு வேண்டாவெனினும், அங்கும் மாந்தர்கொள்கின்ற ஐயத்தின் தன்மையைக் காணலாகும். நீலமாலை கூறிய குறிகளைக் கேட்டவுடன் "இத்தோன்றலே அவன்" என அநுமானித்துத் துணிந்தவள் உடனே "அல்லனேல் இறப்பல்" என்று எண்ணியதால் அவனல்ல னிவனென மறுத்துவிட்டாள் என்பதற்கில்லை. துணிவும் ஐயமும் தொடர்ந்துவரும் என்னும் மனதின் தன்மையையே அது காட்டுகின்றது. "அன்னவளை அல்லளென ஆம் என அயிர்ப்பானுய்" இராமன் இருந்ததும் இவ்வாறே. இருவரும் அநுமானத்தால் பெறக்கூடிய அளவு நிச்சயத்தைப் பெற்றிருந்தனர். மேலும், அன்னவளே இவள் என்று பெரும்பான்மை இராமன் எண்ணியிருந்தா னென்பதற்கு அச்செய்யுளின் ஈற்றடியில் "இன்னமிழ்தெழக் களிகொள் இந்திரனை ஒத்தான்" என்று கம்பர்கூறிய உவமையும் ஓளவு ஆதாரமா யிருக்கின்றது. அமிர்தத்தை எதிர்பார்த்திருந்த இந்திரன், அதுவே வரப்பெற்று மகிழ்ந்ததுபோல் கன்னிமாடத்தில் கண்ட நங்கையே அம்மண்டபத்துள் வருவாளென்று எதிர்பார்த்தவண்ணம் இராமன் முன்தோன்றினுள், என்று கம்பரும் தன் கருத்தைக் கலந்து கொள்கின்ருர்.

வில்லிறுத்த அவ்வமயத்தில் யாது நிகழ்ந்ததெனப் பார்ப்போம். இராமன் சீதையைக் கன்னிமாடத்தில் கண்ணுற்றுக் காதல்கொண்டிருந்த பெற்றியைக் கோசிகனும் ஒருவாறு உணர்ந்திருத்தல் கூடுமென்றும், அதனைச் சதாநந்தருக்கும் அம்முனிவர் ஒருசிறிது குறிப்பிற் கூறியிருப்பினு மிருக்கலாமென்றுஞ் சென்ற வாரத்து இதழில் செப்பியுளேன். இதனை அங்கு யான் செப்பிவைத்தது பின் அது கார்முகப்படலத்தில் 'நினைந்தமுனி பகர்ந்த வெல்லாம்' என்ற செய்யுளின் பொருளை ஆராயும்போது உதவும் பொருட்டாம். சதாநந்தர் தன் வரலாற்றைச் சொல்லி முடித்ததும், அச்சிலையின்பால் இராமன் மனம் எவ்வண்ணம் நாடியிருத்தல் இயற்கை? ஒருத்திக்குத் தன் உள்ளமெல்லாம் அளித்து உழைப்பவன் மனதில் அத்தருணம் வீரத்திலும் காதலே முன்னிற்கவல்லது. நெருநல் அங்கு நயந்து நோக்கிய காரிகைக்கும் இன்றிங்கு கிடக்கும் நெடிய வில்லினொடு தொடர்ந்த நல்லாளுக்கும் ஒருவித இயைபு தோன்ருது தீராது. இதனை ஸ்ரீமான் இராமரத்நம்ஐயர் அவர்களும் ஒப்புக்கொள்கின்ருர். அவளே இவள்என்று பெரும்பாலும்துணிந்துளானுயினும், "வில்லை வளைத்தபின் அவளல்லாமற் போயினுல் என் செய!" என்றிவன் சிறிது அஞ்சுதற் கொத்த சந்தர்ப்பம் அது. இந்த அரிய நிலையில் அவன் யாதுசெய்வான். இராமனது மனநிலை ஐந்து திறத்ததாய்இத்தருணம்இருந்திருத்தல்கூடும். ஒன்று, அவள் வேறு இவள்வேறு என்ற ஐயமற்ற உறுதி. அல்லது, அவளே இவள் என்ற ஐயமற்ற நிச்சயம். அல்லது, அவள்தான் இவள் என்ற துணிபு அதிகமாயும், அல்லளோ என்ற ஐயம் சிறியதாயும் இருத்தல், அல்லது அவளல்லள் இவள் என்றதுணிபுஅதிகமாயும் ஒருகால் ஆவளோஎன்ற ஐயம்சிறியதாயும் இருத்தல். அல்லது அவள் இவள் ஆதல்கூடும் என்ற எண்ணங்கூடத் தோன்ருதிருத்தல். இவைகளில் முதலிரண்டையும் கடையொன்றையும் நானுங்கூறவில்லை, ஐயரவர்களுங் கூறவில்லை. நடுவிரண்டில், நான் இராமனுக்குத் துணிவு அதிகம் என்று கருதலாம் என நினைக்கின்றேன். ஐயரவர்கள் ஐயம் அதிகம் எனக் கருதுகின்ருர். இவ்வளவே எம்மிருவருக்கும் உள்ளவேறுபாடு. அபிப்பிராய வகையிலேயே நேர் எதிர் எதிர் நின்ருலும் ஒன்றை ஒன்று 'தப்பு' என்று சொல்வது எளியதாகாதிருக்க, அளவிலே மாத்திரம் பேதம் இருக்கின்ற இவ்விஷயத்தில் 'தப்பு' என்று தேர்ந்து செப்புவது இயலுமோவெனச் சிந்திக்கின்றேன். வாஸ்தவத்தில் தப்பேஎன்று எழுதத்துவக்கிய அவர், வரவர இடையில் 'இருத்தலும்கூடும்' என்று இணங்கி,இறுதியில் 'ஆவாளோவென்று சிறிது சந்தேகித்தான்இராமன்' என்று ஒப்புக்கொள்ளும்படி நேர்கின்றது.இனி இவ்விடையை ஓதுவாராயின்,ஆகாளோஎன்றசந்தேகமே சிறிது என்று விளம்புவாரென்றே நம்புகின்றேன்.

எனின், வில்லிற்குரியவள் தன் மனதிற்கினியவளாகாள் என்னும் அச்சமே, ஸ்ரீமான் இராமரத்நம்ஐயர் நினைக்க முயல்கின்றபடி, இராமனுக்கு அதிகமாயிருக்குமாயின் அவன், "எப்படியாவது பிந்தி அதை மாற்றிவிடுகிறது" எனத் 'துணிந்தபின் எண்ணுவம்' எனும் இழுக்கிற்கு இடந்தான். இளங்கோவோ இணங்காஞகில், அணங்கவளும் "நின்னையே மணப்பல்" எனத் தலைநின்ருளாகில் இராமன் நிலை என்னும்! வீரத்தின் ஆர்வத்தால், தானும் மணக்காது, (சாலுவன் அம்பையை மறுத்ததுபோல்) பிறரும் மணக்க இயலாது ஒரு பெண்ணின் வாழ்விற்கு வழுவுண்டாம் கருமத்தை ஓராது ஏற்பானென்ருல், பின் அவன், "பெரிதுத்தம னுவதுண்டோ!" அவ்வில்லை வளைத்துத்தான் தீரவேண்டுமென்று யாவரும் அவனை விதித்ததில்லை. விச்வாமித்திரரும், "போரேற்றின் முகம் பார்த்தார்" அன்றி ஏவினுரல்லர். ஏவியிருப்பினும், உள்ளதை உரைக்கத் தடுக்கும் நாணமும், தன் வீரமும் பழுதுருவகை தன்னைக் காத்துக்கொள்ளும் மதிநுட்பம் உடையவன் இராமன் எனவே மதிக்கின்றேன். "எந்தை பணியாமுன் யானிது முயலற்பாலனல்லேன்; முந்தி அவர்கருத்து உணருமாறு செய்வீர், பெரியீர்," என்றனனுயின்பின்னென்றும் பிழைக்காது. இதற்கிடையில், தனது ஐயத்தை, ஒன்றல்ல, பலவகைகளில் தீர்த்துக்கொண்டிருக்கலாம். இப்படி இவன் செய்யாத தாலேயே, இருவரும் ஒருத்தியெனும் நிச்சயமே அவனிடம் நிலைத்து நின்றதென எளிதிற் கொள்ளலாம்.

வில்லி பாரத விளக்கம்

ஆதி பருவம்.

குருகுலச் சருக்கம்.

கங்கையின் வனப்பை விழியினுற் பருகிய மன்னன் அவள் எழினலங்கண்டு, இத்தகைய காமரு வடிவினுள் இந்நிலவுலகத்தினளோ, அன்றி மலைமகளோ, திருமகளோ, நாமடந்தையோ என்று ஐயுற்று அவளை உற்று நோக்கினுன்.

92 பக்கத் தொடர்ச்சி

வையக மடந்தைகொல் வரை மடந்தைகொல்
செய்ய பங்கய மலர்த்திரு மடந்தைகொல்
துய்யவண் கலைவிதச் சொன் மடந்தைகொ
லையமுற் றனனிவ ளார்கொ லென்னவோ.

பின்,

கண்ணிமைத் திருநிலங் காலுந் தோய்தலால்
பெண்ணிவள் மானுடப் பிறப்பி னுளென
வெண்ணமுற் றவளரு கெய்தி யாவர்செய்
புண்ணிய நீயெனப் புகழ்ந்து போற்றினுன்.

கண் இமைத்தலால் வானவர் நாட்டினளல்லள்என்றும், காலும் நிலத்தில் ஊன்றுதலால் விண்ணவர் மாதல்லள் என்றும் தெரிந்துதான்கொண்ட ஐயநீங்கி, இவள் மானுடப் பெண்ணென்று துணிந்து அவளருகிற்சென்று, "இத்தகைய பேரெழில்வாய்ந்த மங்கையொருத்தியைப் பயந்ததற்கு நின்னிருமுது குரவரும் என்னபுண்ணியஞ்செய்தார்களோ, அவராவார் யாவ" ரென்று அவளை வினவினுன். இவை மூன்று செய்யுளாலும் அகப்பொருட்டுறைக்குரிய காட்சி ஐயம் துணிவு விளக்கப்பட்டன. புகழ்ந்து போற்றினுனென்பது, அரசன் கங்கையிடம் நாடிய வுறவுபெறுங்கிளைமை என்பது தோன்ற நின்றது. இருவரும் பெருமையுற்ற தலைமக்கள் ஆதலால், அரசன் அவளுடன் மிக்க விநயத்துடனும் மரியாதையுடனும், வார்த்தையாடினுனென்பதைக் கவி, இப்பாட்டாலும் பின்வரும் செய்யுட்களாலும், தெரிவிக்கின்ருர். ஆகையாற்ருன் இப்பாகம் படிக்கப் படிக்க இனிமையைத் தருகின்றது.

போற்றிய குரிசின்மேற் புளக மெய்தவே
யேற்றிய விழியின ளிளகு நெஞ்சினள்
சாற்றிய மலரயன் சாப மிவ்வழித்
தோற்றிய தெனவுறு துயர நீங்கினுள்.

[இவ்வாறு தன்னைப் புகழ்ந்து பாராட்டிய அரசன்மேல், அவனுடைய மெய்ப் புளகமெய்த, தன்னிரு விழிகளையும் ஏற்றி, அவனிடம் ஆதரங்கொண்ட நெஞ்சினளாய், முன் வேதா இட்டசாபம் இப்படி நேர்ந்ததெனத் தன் மனத்துள் முன்கொண்ட துயரம் நீங்கினுள்]

பிரம்மாவின் சாபத்தின்படி கங்கையும், வருணனை மணக்கவேண்டிய வளாதலால் வருணன் இவ்வாறு சந்தனுவின் உருவெடுத்து நிற்க, அவனைத் தலைமகனையடையவேண்டி யிருத்தலால் அவனிடம் அவள் நெஞ்சு இளகிற்று. புளகமெய்த ஏற்றிய விழியினள் என்பது ஏறெடுத்துப்பார்த்த பார்வையள் என்னும் பொருளில் அமையாமல், ஏவிய என்னும் பொருள்பட நிற்றலால், அதன்பிரயோகம்சிறந்ததாய்த்தோன்றவில்லை. 'ஏற்றிய விழியினள்' என்பதற்கேற்ப,

'கூற்றுறழ் தடங்க ணுவி கொள்ளைகொண் டுண்ண வேவி
மாற்றமொன் றுரையா திங்ஙன் மதிமுகங் கோட்டி நின்றீர்'

என்று அதிவீரராம பாண்டியர் சொல்லியிருப்பதும் இங்கு நோக்கத்தக்கது.

பொங்கிய இவள்கண்ணின் செயலையும், இவள் குறிப்பையும் அறிந்த வேந்தன், "நீ கன்னியாயின், எவரையேனும் மணஞ்செய்துகொள்ள உனக்கு விருப்பமிருக்குமானுல், மண்ணின்மேல் என்னைவிட உயர்ந்தாரில்லை. யான் வேந்தர்வேந்தன்; இனி உன்னெண்ணம் இன்னதெனத் தெரிவிப்பாய்" என இரந்தான். இதைக் கேட்டவுடன், கன்னியர்க்குரிய அச்சம் மடம் நாணம் பயிர்ப்பெனுங் காவல் நீங்காதவளாய்க் கங்கையும்,

'நாணின ளொதுங்கி னணதி மடந்தையும்
பூணுறு முலைமுகம் பொருந்த நோக்கினள்
சேணுறு தனது மெய்த்தேசு போனகை
வாணில வெழச்சில வாய்மை கூறுவாள்

நாணித் தலைகுனிந்து சற்றே யொதுங்கி நின்று, தூரத்தே விளங்குகின்ற தன்னுடைய மெய்யின் ஒளிபோல் பிரகாசிக்கின்ற நகையாகிய நிலவு தோன்றச் சில வார்த்தை கூறினுள்.

இங்கே நகையென்பது உள்ளக்குறிப்பைத்தோற்றுவிக்கும் முறுவலாகாமல், அரசன், தான் கேட்கப்போகும் நேரியவாகாத நிபந்தனைகட்கெல்லாம் கட்டுப்படப்போகிருனுதலால், அப்படி அவன் தன் வலையிற் றளைபடும்படி அவனுள்ளத்து அடக்கமுடியாமலெழுந்த காம வெள்ளத்தைக்கண்டு, 'இவனறிவும் விதிவலியும் இருந்தவாறென்னே' என்று எள்ளி நகையாடினுள். இனி இது விரிக்கிற் பெருகுமாதலான் இத்துடன் மேற்கோள்களை நிறுத்துவோம். அரசன் அவள் கேட்டவைகளுக் கிணங்கி உறுதிகூறியதும், அதன்படி அவள் மன்னனை மணந்ததும், பின்னெழு புதல்வரைக் கங்கையில் விட்டதும், அதனுல் அரசன் மனங் கைத்து இறுதியில் அவளைத் தடுத்தது மெல்லாம் வெகுநன்ருய்ச்சொல்லப்பட்டிருக்கின்றன. இவளுடைய பிரிவும், பின் அரசன் தன்னந்தனியனுய், வேற்றுமுகம்பாராமல், அவளுடையபடத்தைஎழுதித் தன்முன் வைத்து யாவருடனும் வார்த்தையாடாமல் தன் வருத்தத்தைத் தானே பொறுத்ததும், அதன் பின் வேட்டையாடி மறுபடி கங்கைக் கரையடைந்ததும், அங்குத் தன் புதல்வனைக் கண்டதுமெல்லாம் வாசிப்போர்க்கு இன்பத்தைத் தருகின்றன. கங்கை தோன்றியதுமுதல் தன் குமாரனுல் வீழ்த்தப்பட்டு மூர்ச்சையாய்க்கிடந்த அரசனைக் கங்கை மீண்டும் தோன்றி ஆதரித்து, பெறற்கரிய மகனை அவனிடம் ஒப்புவித்துப் பிரியமாட்டாதவளாய், ஓரடிக்கோரடியாய்ப் பின்வைத்துத் தன் தலைவனிடம் உள்ளம் நிற்க, உடலைக் கங்கையிற்கொண்டு அவள்சேர்த்தவரையில், நாடகம் நடிப்பதுபோல் நிகழ்ச்சிகள் யாவும் நம் மனத்தே ஊன்றி நிற்கச் சமர்த்துடன் வில்லி எழுதியிருப்பது மிகவும் வியக்கத்தக்கது.

இந்தப்பாகம் ஏன் அவ்வளவு இனிமை யிருக்கிறதென்று நாம் எண்ணிப்பார்த்தால், இதில் தலைவன் தலைவியர் இருவரும், மானுட இயற்கைக்கேற்ப வார்த்தையாடலே நமக்கு மகிழ்ச்சியை யுண்டாக்குகின்றது. பெருங்காப்பியங்களில், இவ்வாருனசம்பாஷணை அடிக்கடி நிகழவேண்டும் என்று ஓர் ஆங்கில ஆசிரியர் கூறியிருக்கிருர். அதற்கேற்ப, கிரீக் லாடின் முதலிய மொழிகளில் பெருங்காப்பியங்களைப் புகழ்பட எழுதி யிருப்போர்களெல்லாம் இவ்வாறே சம்பாஷணையை மிகுதியும் கையாண் டிருக்கிருர்கள் என்று குறிப்பிக்கிருர். பண்டைக்காலத்தில் எழுதப்பட்ட பெருங்காப்பிய நூல்களெல்லாம் இவ்வாறே, வாசிப்போர் மனதில் விஷயங்கள் பதியும்வண்ணம் சம்பாஷணை மூலமாய்க் கருத்துக்களைத் தெரிவிக்கின்றன. நடிகர்கள் பேசுவதனுலும், அவர்கள் வாயாகக் கதைசொல்லப்படுவதனுலும், நூலாசிரியரை மறந்து, நடிகர்களின் வார்த்தைகளிலேயே வாசிப்பவர்கள் கருத்தைச் செலுத்துகிருர்கள்.

இதனாற்றான் கற்றணைத்து மாந்தர்க்குஇன்பம்ஊறுகிறது. இதனுண்மை வால்மீகி இராமாயணத்தில் நன்குவிளங்குகிறது. அவர் தன்னூல் முழுமையும் அவ்வாறே சம்பாஷணை மூலமாய் எழுதியிருத்தல் கவனிக்கத்தக்கது. அதோடு அவர், கேட்போர் மனதில் விஷயங்கள் ஊன்றும்வண்ணம் கூறியதையே மீண்டும் மீண்டும் கூறிக்கொண்டும், ஏதாவது ஒரு விஷயத்தை யெடுத்தால் அதற்கு முன்போன விஷயங்களையெல்லாம் சேரத்தொடுத்தும் எழுதியிருப்பது மேற்கூறிய மானிட இயற்கையை நன்கறிந்தே என்று தெரியவருகிறது. கம்பராமாயணத்திலும், அவ்வாறே சம்பாஷணைகள் நிகழும் இடங்களே, வால்மீகியின் இராமாயணத்தைவிடச் சிறந்தனவாய் அமைந்திருக்கின்றன. வில்லி அவ்வாறு சம்பாஷணையை அதிகமாய்த் தொடுக்கவில்லை. நாம் முன் சொன்னதுபோல் அவர் கதையைத்தான் சொல்வதாகவே பெரும்பாலும் சொல்லிப்போகிறார்.

எனதுநண்பர் ஒருவர், வருணனைச் சபிக்கும்போது 'பார்மகள் பாக்கியமென்ன வுற்பவிக்க நீ' என்று பிரமன் கோபாவேசத்திற் சொன்னது பொருத்தமில்லையென்றும், வசுக்கள் முனிவரரைப்பற்றிக் கூறும்போது 'முசுக்குல மணியமெய்ம் முனிவர் கூற்றும்' என்று முனிவர்களைக் குரங்குகளுக்கு ஒப்பிட்டுக் கூறியிருத்தல் அழகாயில்லையென்றும், என்னிடம் தெரிவித்தார். வருணன் உலகிற் பிறத்தல் பார்மகளுக்கு ஓர் பாக்கியம் என்றாலும் கோபத்திற் சபிக்கும்போது பேறழிவைப்பற்றிச் சொல்லுவாரேயொழிய, மற்றவர் அவ்வழிவு காரணமாய்ப் பேறடைதலைச் சொல்லார் என்பது உண்மையாகத்தான் தோற்றுகிறது. முனிவர்கள் தசைவற்றிக் கன்னங்களின் எலும்பு புறத்தே தோன்றவும், விரதத்தினால் கண்கள் குழிந்தாழ்ந்திருக்கவும், முகத்திலும் உடலிலும் உரோமம் வளர்ந்திருக்கவும் பெற்றதனால் அவர்கள் குரங்கினத்தை ஒத்திருந்தாலும், முனிவர்களை அவ்வாறு கூறல் அடாதென்பது என்நண்பர் கொள்கை. ஆயினும், சாபம் பெற்ற வசுக்கள் கோபத்தால் அக்குரங்குகள் என்று முனிவரைத் தூற்றினரென்று அதற்குச் சமாதான முரைக்கலாம்.

நமது தோற்றுவாயில், வில்லிபுத்தூரார் வைணவரேனும், ஆங்காங்கு முருகக்கடவுளை உவமையாகக் கூறி யிருக்கிறாரென்றுரைத்தோம். அவ்வுவமைகளிற் சிலவற்றை இங்கே குறிப்பிடுவோம்.

புரூரவன்

'மதனனுங்கலை முருகனுமெனும்படி வளர்ந்தான், என்றும்

பரதனை

'அரசர் யாவருமறுமுகக் கடவுளென்றயிர்ப்ப' என்றும்

தேவவிரதனை

'இவனே விடையவன்குமரனென்றயிர்க்கும்' என்றும்

அம்பையை

'செயலிலாறு முகனிகரெனத்தகு சிகண்டியாயினன் சிறக்கவே' என்றும்

வீமனும் இடிம்பையும்

'வள்ளியுங் கந்தனுமெனப் பெருங்காதல் கூரவே'பொருந்தியிருந்தார் என்றும்

கூறியிருத்தல் காண்க.

இனி, குருகுலச் சருக்கத்தில் பொருத்தமுடைய உவமை முதலியவைகளைக்கூறி இந்தப் பாகத்தை முடிப்போம்.

> தூநகை மொழிப்படி சோர ராகியே
> வானவர் வணங்குதாள் வசிட்டன் வாழ்மனைத்
> தேனுவை யிரவினிற் சென்றுகைக் கொளா
> மீனெறி கரந்தென மீள வேகினேம்

'மீனெறிகவர்ந்தென' என்றும்பாடபேதமுண்டு. வசுக்கள் எண்மருள் பிரபாசன் என்னும் வசுவின் மனைவி வசிட்டரிடம் இருந்த காமதேனுவைக் களவாடும்படி தன் கணவனைத் தூண்ட, அவனும், மற்றைய எழுவரின் உதவிகொண்டு காமதேனுவைக் கவர்ந்தான். அவர்கள் சென்று களவாடித் திரும்பினவழி யாவருக்கும் தெரியாததலால் அதற்கு உவமையாக மீன் சென்றவழி எவருக்கும் தெரியாமல் மறைந்தாற்போல் என்று உவமித்திருக்கிறார். மீனெறி கவர்ந்தென என்னும் பாடத்திற்கு, மீன் எறியால்வரும் துன்பத்தை யறியாது இரை பொருந்திய தூண்டிலைக் கௌவினாற்போல் பின்வரும் துன்பத்தை யறியாது காமதேனுவைவௌவினேம்என்பதுமிகவும்பொருத்தமுடைத்தா யிருக்கின்றதன்றோ.

மச்சகந்தி சிலநாள் பட்டணவரிடை வளர்ந்து பின் சந்தனுவை மணந்து மீண்டும் அரசகுலத்தை யடைந்ததை. 'கானமென் குயில்போல்வந்து மீளவும் தன் காவலர் குலத்திடைக் கலந்தாள்' என்று, குஞ்சு பொரிக்கும் இயல்பில்லாத குயில் தன் முட்டையைக் காக்கையின் கூண்டில் வைக்க, அம்முட்டை குஞ்சாய்க் காக்கையின் கூட்டத்தோடு வளர்ந்தவரினும், பின்னால் தன்னின மடைவதுபோல், இவளும் அரசகுலத்தை யடைந்தாள் என்பது நன்றாயிருக்கிறது. கங்கையினிடத்தில் கொண்ட ஆர்வத்தால் அரசன் நாளுக்கு நாள் அழகிழந்தான் என்பதற்கு,

'பங்கயானனந்தான் முறைமுறை குறையும் பான்மதியெனவழகழிந்தது' என்பதுபொருத்தமுடைத்து. சிலேடை யணியொன்றும் கவனிக்கத் தக்கது.

> காளி வந்து கலந்தனள் கங்கைவேய்த்
> தோளி யும்புயந் தோய்ந்தனண் முன்னமே
> தாளி வெம்பரி மாநெடுந் தேருடை
> மீளி தானும் விடையவ னாதலால்

இச்செய்யுள் சிவனுக்கும் சந்தனுவுக்கும்சிலேடையாய் யாக்கப்பட்டிருக்கிறது. சந்தனு வருணனுடைய அவதாரமாகையால் அவனை வருணனெனக்கூறினர். சந்தனுவைக் குறிப்பதாயின் 'காளியென்னும் பெயருடைய பரதவர் பெண்ணாகிய மச்சகந்தியும் வந்து கலந்தாள்; இதற்குமுன் மூங்கிலையொத்த தோளையுடைய கங்கையும் அவன்புயந் தோய்ந்தாள், வட்டமாயோடும் போர்புரியும் வெம்மையையுடைய குதிரையையும் பெருந்தேரும் அல்லது குதிரைபூட்டிய பெருந் தேரும் உடைய வலியுடைய சந்தனுவும் இடபக்குறியுடைய வருண னவதாரமாதலால்' என்று பொருள். இனிச் சிவனைக் குறிப்பதானால், 'கருநிறமுடைய உமை வந்து சேர்ந்தாள்; முன்னரே கங்கை சேர்ந்திருந்தாள். மூன்றும் வரிக்கு அதே பொருள்கொண்டு விடையவன் என்பதற்குச் சிவனெனக் கொள்ளவேண்டும்.

சந்தனு மூர்ச்சையாய்க் கிடந்தபோது கங்கை ஓடோடியும் வந்து அவனுக் குபசாரஞ்செய்ய அவனும், "வாடிய தருவின் மழை பொழிவதுபோன் மடவரல் கருணைநீர் பொழியக்கூடிய வுணர்வோடெழுந்த காவலன்" என்று கூறியது, "வாடிமண் மடிந்த பைங்கூழ் மழைவிழத் தளிர்க்கு மாபோல்" என்ற ஒட்டக்கூத்தரின் கூற்றை நினைவூட்டுகிறது.

வீடுமன் தான் மன்றலெய்தேன் என்று சபதஞ்செய்த சமயத்து அவன் தகப்பன்,

> 'தந்தையர்க்குதவு முதவியெனைக்குச் சதமடங்குதவினை [யுனக்கு
> மைந்தருக்குதவு முதவியிற் சிறிது மாதவஞ் செய்திலேனு [தவ'

என்றுகூறியது திருவள்ளுவரி னுலகப்பிரசித்திபெற்ற விரு குறளையுங் குறிக்கின்றன. வீடுமனைக் கொல்லப் பெருந்தவமியற்றிய அம்பையைக் கூறுமிடத்துச்சொல்லணியமைந்திருத்தல்நோக்கத்தக்கது. 'வம்பைமோது முலை வம்பைவீசுகுழல் வம்பைமன்னுமெழில் வரிகொள்கூ ரம்பைமானும்விழி யம்பை யென்பவளுமாய மாதவ மியற்றினாள்.' கச்சை மோதுந்தனமும், மணம்வீசுங் கூந்தலும், அவ்வப்போது வெவ்வேறனவுணர்ச்சிகளை உண்டாக்கும் புதுமையையுடைய செவ்வரிபடர்ந்த கூரிய அம்பையொத்த விழியையுமுடைய அம்பையென்னும் பெண்மணி அருமையான சிறந்த தவத்தைச் செய்தாள் என்று நயம்பட வுரைத்திருக்கிறார் நமது வில்லி.

தமிழ்ப் பாடம் 58.

[நள வெண்பா]

கலி நீங்கு காண்டம்.

அன்னவாறு இரங்கி இரங்கி நைந்துநைந்து நளன் கடற்கரையைக் கடந்து சென்று, அயோத்திமா நகரை அடைந்து, அங்கு அரசாண்டிருந்த இருதுபர்ன இராஜனிடம் தேர்ப்பாகனாகவும் சமையற்காரனாகவும் தொழிலில் அமர்ந்தான் என்பதை இனிவரும் ஆறு செய்புள்கள் கூறுகின்றன.

> முன்னீர் மடவார் முறுவற் றிரள்குவிப்ப
> நன்னீ ரயோத்தி நகரடைந்தான்—பொன்னீர்
> முருகுடைக்குந் தாமரையின் மொய்ம்மலரைத் தும்பி
> அருகுடைக்கு நன்னாட் டரசு. 23.

பதப்பிரிவு:—முன் நீர் மடவார் முறுவல் திரள் குவிப்ப நல் நீர் அயோத்திநகர் அடைந்தான் பொன்ஈர் முருகு உடைக்கும் தாமரையின் மொய் மலரை தும்பி அருகு உடைக்கும் நல் நாட்டு அரசு.

அன்வயம்:—பொன் ஈர் முருகு உடைக்கும் தாமரையின் மொய்ம்மலரைத் தும்பி அருகு உடைக்கும் நல்நாட்டு அரசு—முன்நீர் மடவார் முறுவல் திரள் குவிப்ப—நல்நீர் அயோத்தி நகர் அடைந்தான்.

பதவுரை.

பொன் - மகரந்தத்தையும்
ஈர் - குளிர்ந்த
முருகு - வாசனையையும்
உடைக்கும் - வீசுகின்ற
தாமரையின் - தாமரையினது
மொய் - (இதழ்கள்) அடர்ந்த
மலரை - பூவை
தும்பி - வண்டுகள்
அருகு - பக்கத்திலிருந்து
உடைக்கும் - (கால்களால் கிண்டி) மலர்த்துகின்ற
நல் - நல்ல
நாட்டு - நாட்டினது
அரசு - அரசனாகிய நளன்,
முன்நீர் - கடலானது
மடவார் - மாதர்களது
முறுவல்திரள் - பற்களின் வரிசையைப் போன்ற முத்துக்களை
குவிப்ப - கரையில் குவித்துக் கொண்டிருக்க (அவ்வழியைக் கடந்து)
நல் - நல்ல
நீர் - நீர்வளப்பமுடைய
அயோத்தி - அயோத்தியென்னும்
நகர் - நகரத்தை
அடைந்தான் - சேர்ந்தான்.

குறிப்பு:—முறுவல், என்றால் பல்என்பது பொருள். அது இங்கு உவமை ஆகுபெயராய் முத்தை உணர்த்தியது.

> மான்றேர்த் தொழிற்கு மடைத்தொழிற்கு மிக்கோனென்
> றான்றேய்க்கும் வேலா னுயர்நறவத்—தேன்றோய்க்கும்
> தார்வேந்தற் கென்வரவு தானுரைமி னென்றுரைத்
> தேர்வேந்தன் வாகுகனாய்ச் சென்று. [தான் 24.

பொழிப்புரை:-தேர்களையுடைய வேந்தனாகியநளன், வாகுகன் என்னும் பேரோடு சென்று, (இருதுபர்ன மகாராஜனது வாயிலில் இருந்த தூதரைப் பார்த்து) "பகைவர்களது உடலைக்குறைக்கின்ற வேலாயுதத்தையுடையவனும், உயர்ந்த மணமமைந்த தேன் தோய்கின்ற மாலையை அணிந்தவனுமாகிய உங்கள் அரசனுக்கு, குதிரைகள் கட்டிய தேரை நடத்துந் தொழிலிலும் சமையல் தொழிலிலும் சிறந்தவன் நான் வந்திருக்கிறேனென்று என் வரவைத் தெரிவியுங்கள்" என்று சொன்னான்.

> அம்மொழியைத் தூத ரரசற் கறிவிக்கச் [ழிக்குத்
> செம்மொழியாத் தேர்ந்ததனைச் சிந்தித்தே-இம்மொ
> தக்கானை யிங்கே தருமி னெனவுரைக்க
> மிக்கானுஞ் சென்றான் விரைந்து. 25.

பொழிப்புரை:—அந்த வார்த்தையைத் தூதர் அரசனிடம் போய்ச்சொல்ல, அவன் இவை மிகவும் செம்மையாய் இருந்தன என்று உணர்ந்து, தேர்த்தொழிலும் மடைத்தொழிலும் செய்கின்ற வொருவன் இவ்வளவு செம்மையாகப் பேசவும் வல்லவனோ என்று சிந்தித்து, அவனைப் பார்க்கவேண்டும் எனும் ஆவல் உடையவனாய், "இப்படிப்பட்ட வார்த்தை சொல்லும் தகுதியுடையவனை இங்கே அழைத்து வாருங்கள்" என்று சொல்ல, தூதர் வந்து நளனுக்கு அதைச் சொன்னதன்மேல், யாவரினுஞ் சிறந்தவனாகிய அவன் விரைந்து உள்ளே சென்றான்.

> பொய்யடையாச் சிந்தைப் புரவலனை நோக்கித்தன்
> செய்ய முகமலர்ந்து தேர்வேந்தன்—ஐயாநீ
> எத்தொழிற்கு மிக்கானி யாது பெயரென்றான்
> கைத்தொழிற்கு மிக்கானைக் கண்டு. 26.

பொழிப்புரை:—பொய் அடையாது மனதுடைய நளனை இருதுபர்னன், தனது செம்மையான முகம் மலர்ந்து நோக்கி, அவனைக் கைத்தொழிலில் வல்லவன் ஒருவனாகமதித்து, "ஐயா நீ, எத்தொழில் செய்வதில் சிறந்தவன்" என்று வினவினான்.

189041

> அன்ன மிதிப்ப வலர்வழியுந் தேறல்போய்ச்
> செந்நெல் விளைக்குந் திருநாடர்—மன்ன [னென்றான்
> மடைத்தொழிலுந் தேர்த்தொழிலும் வல்லன்யா
> கொடைத்தொழிலின் மிக்கான் குறித்து. 27

பதப்பிரிவு:- அன்னம் மிதிப்ப அலர் வழியும் தேறல் போய் செம் நெல் விளைக்கும் திரு நாடர் மன்ன மடை தொழிலும் தேர் தொழிலும் வல்லன் யான் என்றான் கொடை தொழிலில் மிக்கான் குறித்து.

அன்வயம்:- கொடைத் தொழிலின் மிக்கான், குறித்து, "அன்னம் மிதிப்ப அலர் வழியும் தேறல்போய்ச் செம்நெல் விளைக்கும் திருநாடர்மன்ன, யான் மடைத் தொழிலும் தேர்த்தொழிலும் வல்லன்" என்றான்.

பதவுரை.

கொடை - (கேட்டவர்களுக்குக் கேட்டதை வரையிலாது) கொடுப்பதாகிய
தொழிலில் - செய்கையில்
மிக்கான் - சிறந்தவனாகிய நளன்,
குறித்து - (அயோத்தி மன்னன் வினவியதை) மனதிற் கொண்டு
"அன்னம் - அன்னங்கள்
மிதிப்ப - ஏறித் துவைப்பதால்
அலர் - தாமரை மலரினின்று
வழியும் - வழிகின்ற
தேறல் - தேன்
போய் - பாய்ந்துபோய், (வயல்களிலுள்ள)
செம் - சிவந்த
நெல் - நெல்பயிரை
விளைக்கும் - விளையச் செய்யும்
திரு - அழகிய
நாடர் - அயோத்தி நாட்டு ஜனங்களுக்கு
மன்ன - மன்னவனே,
யான் - நான்

மடைத்தொழிலும் - சமையல் தொழிலும்
தேர்த்தொழிலும் - தேரை ஓட்டும் தொழிலும்
வல்லன் - வல்லவன்''
என்ருன் - என்று கூறினன்.

இலக்கணம்.

எழுத்துக்களை உச்சரிப்பதற்கு வேண்டிய கால அளவை மாத்திரை என்பர். ஒருதரம் கையைநொடிப்பதற்கு அல்லது கண்ணைக் கொட்டுவதற்கு வேண்டியபொழுது ஒரு மாத்திரை. அ, இ, உ, எ, ஒ என்ற ஐந்து உயிர்க்குறில் எழுத்துக்கள்ஒவ்வொன்றும் ஒரு மாத்திரை பெறும். ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்ற ஏழு உயிர் நெடில்கள் ஒவ்வொன்றும் இரண்டு மாத்திரை பெறும். க் ச் ட் த் ப் ற் என்ற ஆறு வல்லின மெய் எழுத்துக்கள் ஒவ்வொன்றும் அரை மாத்திரை பெறும். ங் ஞ் ண் ந் ம் ன் என்ற ஆறு மெல்லின மெய் எழுத்துக்கள் ஒவ்வொன்றும் அரை மாத்திரையே பெறும். அவ்விதமே ய் ர் ல் வ் ழ் ள் என்ற ஆறு இடையின மெய் எழுத்துக்கள் ஒவ்வொன்றும் பெறுவது அரை மாத்திரையே. ஆகவே, மெய்யெழுத்துப் பதினெட்டிற்கும், அது எந்த இனமாயிருந்தாலும், தனித்தனி மாத்திரை அரை. உயிர்மெய் எழுத்துக்களும் க கி கு கெ கொ, என்பனபோல் வல்லெழுத்து மெய்களின்மேல் உயிர் ஏறியதால் உண்டானவைகளாய் இருந்தாலும், ம மி மு மெ மொ, என மெல்லின மெய் யெழுத்துக்களின் மேல் உயிர் ஏறியதால் உண்டானவைகளாய் இருந்தாலும், வ வி வு வெ வொ, என இடையின மெய்யெழுத்துக்களின் மேல் உயிர் ஏறியதால் உண்டான வைகளாய் இருந்தாலும், குறிலாயிருந்தால், ஒரு மாத்திரையும் அப்படியே நெடிலாயிருந்தால் இரண்டு மாத்திரையும் பெறும். ஆதலால் உயிர் எழுத்துக்களுக்கும் அவ்வுயிர் எழுத்துக்கள் சேர்ந்து ஆன உயிர்மெய் எழுத்துக்களுக்கும் உச்சரிக்கின்ற அளவில் வித்தியாசம் இல்லை. ஃ என்னும் ஆய்த எழுத்திற்கு மாத்திரை அரை.

மேற்சொன்ன அளவுகள் அவ்வந்த எழுத்துக்களுக்கு இயற்கையாய்ப் பொருந்திய மாத்திரைகள் ஆகும். ஆனல் சிற்சில சமயங்களில் சில எழுத்துக்கள் தமக்கு இயற்கையாயுள்ள அளவிற்கு அதிகமாகவேனும் குறைவாகவேனும் ஒலிப்பதும் உண்டு. அதிகமாக ஒலிக்கும்போது அவ்வெழுத்து அளவெடுத்து இருக்கின்றதென்றும் குறைவாக ஒலிக்கும்போது குறுகி இருக்கின்றதென்றும் சொல்வர். முன்னது அளபெடை என்றும், பின்னது குறுக்கம் என்றும் வழங்கப்பெறும்.

செய்யுள்களில், "மாஅல் யானையொடு மறவர் மயங்கி'' என்பனபோல் வந்திருக்கக் காணலாம். இதனில், 'மால்' என்றிருக்கவேண்டியது 'மாஅல்', என வந்திருக்கின்றது 'மா' என்ற எழுத்திற்குப் பின்வந்திருக்கின்ற அ என்ற எழுத்து அச்சுப்பிழை அன்று. 'மா' என்ற நெட்டெழுத்தை இன்னும் சிறிதுநீட்டி உச்சரித்தால்தான் இந்தச் செய்யுளடியின் ஓசை சரியாயிருக்கும் என்று காட்டுவதற்கு அடையாளமாக வந்திருக்கின்றது அந்த அ வென்னும் எழுத்து. ஆகையால், மா, என்ற உயிர்மெய் எழுத்தில் ஏறிப் பின்னதாக உச்சரிக்கப்படுகின்ற ஆ என்னும் உயிர் நெடில், தனக்குரிய இரண்டு மாத்திரை போதாமல் மூன்று மாத்திரை வேண்டியதாயிற்று. அதாவது 'மாஅல்' என்று சொல்லும்போது சாதாரணமாக 'மால்' என்பதைப்போல் உச்சரிக்காமல், மா என்ற எழுத்தை மூன்று தரம் கைந்நொடிக்கின்ற நேரத்தினளவு உச்சரித்து அப்புறம் ல் என்ற எழுத்தைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஆதலால், 'மாஅல்', என்பதில் அ என்ற எழுத்து, மா என்னும் எழுத்திலுள்ள ஆ என்ற உயிர் தன்னளவுக்கு அதிகப்பட்டு ஒலிக்கும் என்று காட்டவந்திருக்கின்றதே அல்லாது, அந்த அ விற்கு இங்கே தனி உச்சரிப்பு இல்லை. இப்படி வந்திருக்கின்ற சொற்களைப் படிக்கும்போது 'மால்' என்று நீட்டிப்படிக்க வேண்டுமே யல்லாது 'மா அ ல்' என்று மூன்றெழுத்துக்களையும் உச்சரிக்கப்படாது. இவ்விதமாக உயிர் நெடில் எழுத்துக்கள் இரண்டு மாத்திரைக்கு மேற்பட்டு உச்சரிக்க வேண்டிய அவசியம் இசையைக் கருதி நேர்கின்றபோது அவை அளவெழுந்து இருக்கின்றதென்று சொல்வோம். அவைதாம் உயிரளபெடை. உயிர்நெடி லெழுத்துக்கள் மாத்திரந்தான் அளபெடுக்கும்; அவ்வாறு அளபெடுக்கும்போது அதற்கு அடையாளமாய் அந்த அளபெடுத்த நெடிலுக்கு இனமாகிய குற்றெழுத்தைப் பக்கத்தில் எழுதிக் காட்டுவார். "கடாஅத்தொடீஇ கேளாய்'' என்ற இடத்தில், ஈ என்ற உயிர் நெடில் அளபெடுத்திருக்கின்றது. ஆகையால் அதற்கு இனமாகிய குற்றெழுத்து இ பக்கத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. ஐ, ஔ, என்ற இரண்டுநெடில் களுக்கும் நேரே குற்றெழுத்துக்கள் இல்லாதபடியால் அவை அளபெடுக்கும்போது, ஐ ஆனல் பக்கத்தில் அதற்கினமான இயும், ஔ ஆனல் அதற்கினமான உவும் எழுதப்படும். உயிர்க் குற்றெழுத்துக்கள் அளபெடுக்கா.

இவ்விதமே மெய்யெழுத்துக்களும்சில, ஒவ்வொரு சமயம் தம் அரைமாத்திரைக்கு அதிகப்பட்டு ஒரு மாத்திரையாக, இசைநயங் கருதிச் செய்யுள்களில் உச்சரிக்கப் படுவதுண்டு. அவைகளுக்கு ஒற்றளபெடை என்று பெயர். மெய் எழுத்திற்கு ஒற்று என்ற ஒரு பெயர் உளது. ஆகையால் மெய்யளபெடை என்பதற்குப்பதிலாய் ஒற்றளபெடை என்று வழங்குவார். "கண்ண் கருவிளை'' என்றும், "பொன்ன் பொறிசுணங்கு'' என்றும் வரக்கூடும். கண், பொன், என்ற சொற்களிலுள்ள ண், ன் என்னும் மெய்யெழுத்துக்களை அரை அரை மாத்திரையோடு நிறுத்திக் கொள்ளாமல் ஒரு மாத்திரை அளவு உச்சரிக்கவேண்டும் என்பதைக்காட்ட அந்த அந்த மெய்யெழுத்தே அதன் பக்கத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. "கண்ண்'' "பொன்ன்'' என்று இரண்டுதரம் ண், ன் என்ற எழுத்துக்களை உச்சரிக்கப்படாது. எல்லா மெய்யெழுத்துக்களும் அளபெடுக்கா. ங் ஞ் ண் ந் ம் ன் வ் ய் ல் ள், என்ற பத்து மெய்யெழுத்துக்கள்தான் அளபெடுக்கும். ஃ என்ற ஆய்த எழுத்தும், "எஃஃ கிலங்கிய கையார்'' என்று அளபெடுக்கக் கூடும்.

ஏமாங்கதத் திளவரசன்.

[By Kind Permission of Messrs. B. G. PAUL & Co., Madras.]

1. கண்ணிற் கோரு மண்.

96 பக்கத் தொடர்ச்சி.

ஆதியில் புஜங்கன் ஏமாங்கத நாட்டினது படையைச் சேர்ந்த ஓர் போர்ச்சேவகன். பற்பல போர்களில் இவன் இயற்றிய ஆற்றலை வியந்து சிங்கமுகன் இவனைப் படைத்தலைவன் ஆக்கியிருந்தான். அணித்தலைவனும் உற்றதும் அந்நிலைக்கமைந்த செல்வம் செல்வாக்குமுதலிய மதுவருந்திப் புஜங்கன் எவ்வகையிலேனும்தானோர் அரசனும்ஆகவேண்டுமெனும்ஆசையால்உழல்பவன் ஆயினன். வேந்தன், தானைத்தலைவன் ஆக்கியது மல்லாது தனது இன்னுயிர்ப் புதல்வன் வாசவன் படைத்தொழில் பயில்வதற்கும் புஜங்கனையே ஆசிரியனுகவும் நியமித்திருந்தான். வில்வளைப்பதிலும் வேல் எறிவதிலும் வாள்தனை ஓச்சுதலிலும், தேர் கடாவினும் பரிமா உகைத்திடினும், வருதினிதிறம்பட நடத்துதலிலும், மற்போரிலும், முட்டியுத்தத்திலும் இணையிவனுக்கு எங்குளர் பிறர் என்னும் வண்ணம் கோமகன் வித்தைகற்றுத் தந்தையும் தாயுந் தமரும் தன்னகர் வாழ்மாந்தரும் மனமுவக்க வளர்ந்தனன். வளர்ந்துவந்த வாசவன்பால் சென்ற சிலகாலமாய்ப் படைப்பயிற்சி யொழிந்த சமயங்களில் புஜங்கன், 'எத்தனை நாள் வாசவ, நீ இளவரசாகவே காலம் கழிப்பது. நின் தந்தைக்கு ஆயுள்பலம் அதிகம் ஆதலால் இந்நாட்டுச் செங்கோல் நின் கையடைய யான் காண்பதரிது. காலனும் வயதினளவையே கணக்கிட்டுக் கழிக்கின்ருன் என்பதற்கில்லை ஆதலால் இப்பெருநாட்டிற்கு ஓரரசாய் நீயாளும் நாள் இல்லதுமாகலாம்; இதைத் தவிர்ப்பதற்கு நீ இன்றே செய்வன செய்' என்று பலகால் எடுத்து ஓதுவதும் வாசவச் செம்மல் 'நல்லது, இச்செய்தியைச் சிந்திப்போம்' என்று அவ்வப்போது அவனை விலக்குவதும் நேர்ந்தன. கோத்தந்தையின் படுகொலையே தனக்குக் குருதக்ஷிணையாக இக்கொடியன் கேட்கின்ருன் என்பது அரிய இரகசியமன்று. செவிசுடும்துரோகவசனமிவை கேட்டு வாசவன்சும்மாவிருந்ததேன்! ஏனிவன் அப்பாதகனது பழக்கத்தை அறவே யொழித்திலன். அங்ஙனமே சென்று புஜங்கன் கூறியனவெல்லாம் அரசனிடம் கூறி யேனவனுக்குச் செய்வன செய்துவைக்கவில்லை. அகால ஆட்சியின்பாட்டு இளவலுக்கும் ஒருவேளை மனம் சாய்ந்ததுண்டோ! மற்று மண்பசிப்பேய் தன்வயிற்றிலே பிடித்த புஜங்கனுக்கு வாசவன் பட்டம் பெறுவதில் என்னபயன்? வேந்தனோடு மைந்தனையும் தானே கொன்று இரத்தச்சுவடு படியப் படியப் படியேறிப் புஜங்கன் சிங்காதனம் அமர்வதற்கு எது தடை.

இப்பின்னது கூடாது என்றறியும் சூழ்ச்சி நன்கு தேர்ந்தவன் புஜங்கன். சிங்கமுகனுக்கு ஆற்றலிற்கேற்ற அருளும் இருந்ததால், அவனை வதைத்த தன்னைக் குடிகளும் கோச்சனங்களும் உயிருடன் விட்டு ஒருபோதும் வையார் எண்பது திண்ணம். அருளொடழகும் வாய்ந்தவன் வாசவன். அவனுக்குமோர் தீங்குறத் தரியார். ஆதலால் மன்னனைத்தான் குலத்தோடும் தொலைத்து ஏமாங்கத நாட்டிற்குரிய கிரீடத்தினுள் தன் திருட்டுத்தலையைச் செருகினல் பின் தலையின் மேல் மகுடம் தங்கலாம், அதன்கீழோ ஒரு கழுத்து இல்லாதுபோகும். மகனை யேவித் தந்தையைக் கொல்விப்பதே தக்க தந்திரமாகும். கொன்றவனைப் பின் கொல்வது வெகு எளிது. இதனல் தனக்கு இலாபம் ஆவதாயின் ஆகுக, அன்றிப் பழியே சூழுமாயின் அது வாசவனுக்குத்தானே பொருந்துவ தாகும்.

புஜங்கன், தந்தையைக் கொலை செய்யுமாறு தனயனைத் தூண்டியதன் நோக்கம் இதுவாயின், அன்னதற்கு வாசவன் செவியேனும் கொடுத்துவந்த காரணம் யாவதாகும்?

பாதகக் கள்வன் புஜங்கனுக் கோர்மகள் பஞ்சரவல்லி யென்பாள் இளநலமும் பேரெழிலும் வாய்ந்தவள் இருந்தாள். மாதர்க்குரிய நுண்கலை யனைத்தும் கற்றுத் துறைபோகியதோடு அமையாது தன் அப்பனிடம் ஆண்மக்களுக்குரிய வெஞ்சமரும் விலங்குவேட்டையும் போன்ற பிற வித்தைகளும் பயின்றுளள். குறிதவரு வாய்மையொடு இவள் கணைதொடுக்கும் திறமையைப் புஜங்கனும் வியந்து புகழ்வான். இத் தானைத்தலைவன்பால் வாசவன் அங்குப் பெற்றிருந்த படைப்பயிற்சி யெல்லாம் இவளும் இங்குப் பெற்றிருந்தாள்.

இரும்பு பிடித்தவர் கை சும்மாவிருத்த லருமை. ஒரு நாளிவள் ஆவம் விசித்த வேய்த்தோளினளாய்க் கோதண்ட மேந்தி நகருக்கருகிருந்த மலையின் அடவியில் வேட்டை யொன்று ஆடிப்பார்க்கப் பரிமா வூர்ந்து ஒருவருமறியாமல் புகுந்தனள். சிறுவிலங்குகளெல்லாம் அவள் கோலுக்கு இலக்காகி வெகு எளிதில் மாய்ந்தன.

அச்சமயம் காடும் கிடுகிடுக்கக் கர்ச்சித்து ஓர் ஆண் சிங்கம் அவளெதிரில் தாவிக்குதிக்கப் பஞ்சரவல்லியும் அஞ்சாமல் நாணின்மீது அம்புவைத்தாள் இப்பெண்ணிற்கு இது உண்மையில் கன்னிவேட்டை. இவளுகைத்த குதிரையும் இத் தொழிற்குப் புதியது. ஆதலால் அப்பண்படாப் புரவி மருண்டு குதித்து அவளுக்குக்குறியெடுக்க இடந்தரவில்லை.கேசரியும் அணுகிவிட்டது. மருட்சி மாற்ற இவள் குதிரைக்கு மெல்லென மெல்லெனக் கூவி உரைத்த மென்மொழிகளெல்லாம் வீணே ஆயின. 'பேதைப் புரவியின் பயத்தினல் என் ஆயுதக்கல்வி பயனற்று யான் போகவோ' என அச்சம் கொண்டனள். அரிமாவும் இன்னவள் நிலைகண்டு நகுவதுபோல் பல்விளங்க வாய் திறந்து பாய்வதற்கு முயன்றது. ஆனல் அந்தக் கோரரூபம் காணத்தரியாது இவள்கண் சிறிது இமைத்துத் திறத்தலும் தன்னைப் பற்றவந்த கூற்றுடன் ஒருதோன்றல் கடும்போர் புரியக்கண்டாள். அவன் இடக்கையணிந்த கேடயத்தை அவ்விலங்கின் முகத்திற்கெதிர் நீட்டித் தடுத்து வலக்கை வாளால் அமயம் கிடைத்தபோதெல்லாம் அதன் மார்பில் குத்திக்குத்திச் சிதைப்பவனுயினன். சிங்கமோ புண்ணின் வலி சகிக்காமல், வானிருந்த மேகமும் வெருவிமின்ன ஓர்கர்ச்சனைகர்ச்சித்து அவ்வீரன் கைக்கேடயத்தைப் பொடிப்பொடியாய்க் கடித்து உதறிற்று. வாளன்றித் தன்னுயிர்க்குத் துணையிலா இளவலும் வள்ளுறையை இடைநின் றகற்றிச் சிங்கத்தின் பில வாய்க்குள் நுழைத்தனனுய் மறுகைக் கத்தியால் தற்காத்துப் போர் தொடர்ந்தான். மிருகேந்திரனுக்குத் தனிவீரன் ஒரு பொருளா! வாளையும் மீறி வாய்திறந்து அவன் கழுத்தைக் கவ்வ வந்துவிட்டது. தரைசேர்த்தும் தாவிக் குதித்தும் பின்னங் கால்களில் எழுந்தும் தடுமாற்றம் தந்த குதிரைமீதிருந்த பஞ்சரவல்லி முதுகு நழுவாமல் தன்னைக் காத்ததுமன்றி வாங்கிய வில்லினளாய் இலக்குப் பார்த்துக்கொண்டிருந்தாளேனும் வீரன்மேற் படாமல் விலங்குமீது எய்யச் சமயம் வாய்க்கப்பெற்றிலள். இம்மி இனித் தாழ்வாளானல் குறியும் போய்க் காத்தற்குரிய குரிசிலும்போய்த் தானும் போய், எல்லாம் போய்விடும். ஆதலால், "குனி குனி தலையைக் குனி'' என்று அவ்விளவலைக் கூவிக்குதிரை மீதெழுந்துநின்று அதன்தலையிலொருகாலும் கழுத்திலொருகாலும் ஊன்றி அந்தரத்தில் பந்துபோல் பாய்ந்துயர்ந்து பழுதிலாப் பகழியொன் றேவித் தரையிற் குதித்தனள். இக்குரல் கேட்டுப் பின்திரும்பிய ஏந்தல், குயிலெனக் கூவி மயிலெனப் பறந்து மண்மிசை யிறங்கிய மானினைக் கண்டான். அவளெய்த அம்பும் இவன் முகத்திற்கும் தோளிற்கும் இடையே சென்று சிங்கத்தின் செவ்வாயுள் பாய்ந்து அதைக்

கதறிக் கீழே விழச்செய்தது. மாதரையன்றி மடங்கலும் அடர்க்கவல்ல மன்மதன் இவனேவெனப் பஞ்சரவல்லி அவனது அழகொடு சேர்ந்த ஆற்றலைக்கண்டு வியப்பதும், அவள் குறியெடுத்த திறத்தை இவன் வியப்பதும் ஓரளவு நேர்ந்ததால் இருவரும் சிலையெனச் சமைந்து நின்றனர். அச்சமயம் இறக்கும் அவ்வரிமா யமனைக் கூப்பிட்ட பெருங்குரலே தம்நினைவை அவர்களுக்கு மறுபடியும் வருவித்தது என்னலாம். பஞ்சரவல்லி மருண்ட அக்குதிரையைத் தேற்றுவாள்போல் அதன் உளையுள் அளைந்தும் கழுத்தைத் தடவியும் தன்முகத்தை வாலிப வீரன் எதிர்நோக்கா வண்ணம் காத்துக்கொண்டனள். இவ்வீரன்தான் வாசவக் கோமகனும் ஆவான். இயற்கையின் வனப்பைக் காணுமோர் விழைவினுல் அவன் நகரத்து அயல் நின்ற இம்மலைக்குச்சென்று உலவிவருவது வழக்கம். இந்தமலை மிகப் பெரியதன்று. புலி சிங்கம் போன்ற விலங்குகள் சஞ்சரிப்பதற்கான அடர்த்தியும் அந்தக் காட்டிற்கில்லை. அதனூடே ஒருநாளு மில்லாதபடி சிங்கத்தின் கர்ச்சனையைக் கேட்டவுடன் அவன் அதிசயமெய்தி அவ்வொலி வந்தவழித் தொடர்ந்தான். ஆதலாற்ருன் பஞ்சரவல்லிமீது இச்சிங்கம் பாய்ந்திடாமல் தடுக்க இயன்றது.

அனையவன் இக்காலம் கண்கொள்ளாக்காட்சியாய்த் தன்முன் விளங்கிய வனிதையை நண்ணி, "விற்றொழில் கற்றவர்கள் நின்தரம் நங்காய், நானிதுகாறும் கண்டிலேன்" என்பதற்கிடையே அவள், "ஐய, நின் வாள்தொழிலும் அஃதே" என்று குதிரையின் முகத்தைத் தன்முகத்தோடு அணைத்துச் சேர்த்துக்கொண்டனள். மறுபுறம் நின்ற வாசவன் கலினத்தைப் பிடித்துச் "செயத்திரு அனையாய், நீயே அமரப்பெற்றும் புன்விலங்கிதற்கு வெருவியஇப்பரியை எள்ளித் துரத்தாது அவ்வம்பு பற்றிய கரங்களால் இதைத் தீண்டவும் இசைக்கின்றனையே," என்று அக்குதிரையைப் பின்தள்ளினன். இதனுல்இருவரும் எதிரெதிர்அண்மி நிற்கலாயிற்று. அவ்வளவில் நாணம் மீதூர, விண்மதி மலர்ந்த செந்தாமரைத் துவரிதழ்ஒளித்த தரளநகை வெளிப்படக் கண்ணிரண்டையும் தன்குடங்கைகளால் அளந்து, தளிரடி தரையில் மெல்லப்பெயர்த்து மின்னென ஓதுங்கிக் கொடியெனத் துவண்டனள் காரிகையவளே. வேட்கையில் ஆழ்ந்திருந்த வாசவன் மங்கையின் மெய்ப்பாடு இவை காணப் பரவசமாயினன். ஆயின், பின்னடைந்த வனிதையின் கரங்களைப் பற்றித் தன்பால் சேர்க்க வெண்ணி முன்னொரு அடியெடுத்த அவ்விளவல் ஈரடி பின்னே பெயர்ந்ததற்குக் காரணம்," என்முன் பொலிதருமுருவம் தாங்குவது பெண்மையே ஆனுல், அது வில்வளைத்த நட்பத்திற்கும் குரகதம் அமர்ந்த திட்பத்திற்கும் ஒவ்வாதன்றே! பெண்ணுயின் மானிடப்பெண் ஆகாள். இவ்வனம் காக்கும் தேவியே யாதல் வேண்டும் தாய் வயிற்றில் பிறந்தபெண் அழகிலேனும் ஆற்றலிலேனும் இத்தெரிவை யாகாள்" என்னும் கொள்கையேயாம். மலைவளப் பெருமிதம் வதிந்த அச்சூழலில் உயிர்பெய்த ஓவியம் இரண்டு எதிரெதிர் தீட்டிய வெனத் தத்தம் உள்ளத்து ஒளியுற் றெழுந்த காதலால் இருவரும் பொலிந்தனர். ஆனுல் அணங்கு இவள் என ஐயன் கொண்ட ஐயம் தீர்வதற்கான குறிகளும் சிறிது சிறிதாக இவளிடம் தோன்றின. 'திண்ணியவோர் சிங்கத்தைப் பாணத்தால் வென்ற இம்மகள் காமத்தால் தன்னையே துறக்கின்ருள், கண்டேன் கண்டேன்,' என வம்புஓதிக் காதுடன் போய்ச் சொல்வன போல் இரு கண்களும் மாறிமாறி இரு கடையிலும் புகுந்து தங்குவதும், அருகிருந்த மணிவாய் இச்செய்திகேட்டுப் புன்முறுவல் அரும்பியதும், கைவளை திருத்துவாள்போல் அதனுள் தோன்றிய இறைமகன் எழிலை நயந்து பருகியகண் மயங்கியதும், ஆவி பிடித்த முகுரம்போல் அவள் கபோலத்தலம் கண்ணுலி பாயச் சிறிது மங்கியதும், இன்னபல பிற தோற்றங்களும் கண்டனன் கோமகன், அரமகள் அல்லள் என உள்ளமுவக்கத் தெளிந்தான். இது காறும் அவன் மனதில் அடைத்துவைத்த வேட்கையெல்லாம் பொங்கித் ததும்பப் பஞ்சரவல்லியை அண்மி அவளிருகரங்களையும் கடவுளுக்கு அருச்சனை புரியப்போவார் மலர் எடுக்கும் விதத்தில் தன் கைகளுள் தாங்கி, "வடிவிற்கு ஒவ்வாவன்மையும், தன்மைக்கு ஒவ்வாச்செய்கையும் வதிந்த நீயோர்?" என மொழிந்தனன். அவளும் மெல்லெனத் தன் கரங்களை விடுவித்துக் கனகக் குன்றில் செந்தாமரை ஒத்தியதொக்க அவனிரு தோள்களிலும் வைத்துக் குமுதம் பிலிற்றும் தேன் போல் சில பேசினுள்: "என்னையோ, பெரும, யாரென வினவு கின்ருய்! யான் இன்றளவு இருந்தவள் எவள் என மறந்தேன். உணர்வு போனவழி தேடியும் காண்கிலா வொரு ஏழையாய் இக்காலம் நிகழ்கின்றேன். இனி நான், உனது திரு உருவின் நினைவே எழுந்தருளியுள்ள கோயிலுமாவேன். ஐய, உன் வடிவின் நிழல் யான், நின்குரலின் எதிரொலி நானே. முக்காலமும் இஃதன்றிப் பிறிதொன்றறியேன். பெரியோய் நினது பேரருளினுல் அளியளை யளித்தி."

"மங்கை, நீ யாரெனும் வாய்மை உணர்ந்தேன். கேட்பவள்போல் கொடுக்கும் பெருந்தகை. உனது சொற்களாம் கரும்புக்கடல் எழுந்த அமுதம் பாய்ந்தால் வாட்டம் தீர்ந்த என்னுயிர் தளிர்க்கின்றது.... ....மேகமோ, மாதராய், நின்குழல்! அதன்திறம் கருக முயன்றும் இயலாத பரிபவத்தால் பல்லைத் திறப்பதையன்றோ இப்பேதையுலகம் மின்னலென்றெண்ணும்!" என வாசவன் மீண்டும் அவளது கரங்களைப் பற்றினன்.

"தலைவ, பொய்யிது பாராட்டப் புகுவாய் ஆயின் என்னுளே நாணம் கிளர்கின்றது; இப்பொய்யும் என் கையும் விட்டிடு."

"நாணினையோ, நங்காய்? ஆயின் அன்னதற்கோர் அருமருந்து இந்தா," என்று வாசவன் இப்பஞ்சரவல்லியை இறுகப்புல்லி ஆழ்ந்ததோர் முத்தம் இட்டனன். அவளது மனத் தரங்கினில் ஆசையும் வெட்கமும் இகலிப் புரிந்தபோரிலே முன்னதே வென்றதால் காதலின் ஆர்வத்தைத் தடுத்து யாதும் செய்திலள். கோமகனும் ஊக்கம்மிகுந்து மீண்டுமோர்முத்தம் இடமுயன்றனன். தெரிவையோ அவனைக் "கொடுத்தது கவரும் கள்வ," என நொய்தின் தவிர்த்துச் சந்திரன் புகுந்து தாமரையுள் ஒளித்ததேபோல் முகத்தைக் கையினுள் புதைத்து நின்ருள். இளவரசன் அவளைத் தழுவியழைத்து அவ்விடம் விட்டேக வழியினில் தனது உதிரத்தில் தோய்ந்து கிடந்த சிங்கத்தைக் காணவும் கூசினுள் என்ருல், விலங்கின தரசனையே பலிகல்கித் தன் பெண்மையையும் அதற்கோர் தலைவனையும் ஒருங்கே எய்தினள்போலும் இம்மடமகள் தான்.

வாசவனும் பஞ்சரவல்லியும் அசைந்தசைந்து சென்று ஓர் மரத்தினடியில் அமர்ந்தனர். காதலர் இருவரும் பேச முயன்றன பற்பல. முன்பின் கண்டறியா இருவர் ஒருநாள் சந்தித்ததும் தம்மினுமிக்க உறவினர் பிறர் இல்லை என்னும் பாவனையில் பேசத்தான் புகுந்தாலும் சொல்வதற்கோ ஒன்று கிடைத்தலே அருமை. உன்னழகு என்னழகு என்று எத்தனைநேரந்தான் புகழ்ந்துவருவது! உயிருக்கு உயிரை ஒருதரம் தானே பண்டமாற்றுச் செய்யலாம். இவ்விதம் சிறிது காலம் சொல்வதை நினையாமலும் நினைத்ததைச்சொல்லாமலும் அவ்விருவரும் காதலால் அசதியாடிக் கழித்தனர். இதனிடையில் இவளது குலமும் பெயரும் பெற்றேர் நிலையும் அறிவதற்குப் பெரும் ஆவல் கொண்டவனு யிருந்தான் வாசவன். பஞ்சரவல்லியின் ஆவலும் அவ்வாறே. என்ன என்ன விதத்திலோ கேளாமல் கேட்டு இதனைத் தெரிந்துகொண்டனர். ஆனுல், ஏமாங்கத நாட்டின் இளவரசன் தான் என்பது இப்பொழுதே இவளுணர்ந்தால் ஒருவேளை அன்பையும் மீறிய அச்சத்தினுல் தனது சேர்க்கையைத் தவிர்க்க நினைப்பளோஎனும் சந்தேகம்கொண்ட வாசவன், இராசமா புரத்திருந்த ஒரு தனவந்தனது மகனேதான் எனக் கூறினன். சில தினங்களில் தனக்கு அவள்பால் உள்ள அன்பின் அசைவிலாத் தன்மையை ஐயமறக் காட்டியபின் கோமகன் என்று கூறினும் அதனுல் தம் காதற்கு இடையூறு எய்தாதென்பது அவன்கருத்து. தானைத்தலைவன்மகள் தானென்ருல் இத்தனவந்தன் மகன் என்ன எண்ணுவானே என்று அஞ்சினளாய்ப் பஞ்சரவல்லி தன்னை ஓர் போர்ப்படைஞனது மகளே யாக்கிக்கொண்டனள்.

இன்னவாறு இவர் பொய்சில மெய்சில கலந்து பேசி முத்துமுத்தாய்க் குலாவிக்களிக்கக் கதிரவனும் குடதிசை யொடுங்கினன். கூடினுர் பிரிவது எளியதன்று. தத்தம் உள்ளம் குவிந்த காதலின் தொகுதியைக் கண்ணினுல் அளந்து காட்டினர். வேறு என் எப்படியும் பிரிந்தே தீரவேண்டு மாகையால், பின் சேருமிடமாவது எதுவெனச் சிந்தித்துத் தலைப்படும் இடமும் பொழுதும் திட்டம்செய்து மரத்தடிவிட்டு எழுந்து கைகோத்து நடக்க, அங்குக்கிடந்த சிங்கத்தின் நகம் இரண்டை உரித்தெடுத்துத் தம் காதலுக்குப் பணையமாய் இருவரும் ஒவ்வொன்றைப் பக்தியுடன் முன்தானையில் முடிந்துகொண்டு சென்று புறநகர் புகுந்ததும் வெவ்வேறுவழியில் பிரிந்தகன்றனர்.

பிளோதைனன்.

(PLOTINUS.)

89 பக்கத் தொடர்ச்சி

ஆக அறிவும் பரம்பொருளைப்போல் சிருஷ்டிக்க வல்லது; ஆனுல் சற்றுக் குறைவானது. இதினின்று ததும்பியோடிப் பரிணமிப்பது ஆன்மா. இவ்வான்மா, அக அறிவைப் போல், மதியூகம் நிரம்பப்பெற்றதன்று. ஆனுல், வியவகாரிக ஞானம், அல்லது தர்க்கமுறையால் விஷயாதிகளை ஒருவாறு அறிகின்றது. அகஅறிவு ஜகதீசனைநோக்கி இயங்கி அவருடன் கலக்க யத்தனிப்பதுபோல், ஆன்மாவும் அவ்வக அறிவுடன் ஐக்கியமாக எண்ணி இயங்குகின்றது. ஒரே அகண்டப் பொருளும், ஒரே அக அறிவும், ஒரே பிரபஞ்சமும் உள்ளனபோல், பற்பல ஆன்மாக்கள் இருப்பனபோல் தோன்றினும், யதார்த்தமாக, அவைகளனைத்தும் ஒரே ஆன்மாவின் நானுவிதத் தோற்றங்களாவன. கடவுளைத் தரிசித்து உய்ய அக அறிவு உள்நோக்கித்தியானித்து ஆன்மாவை வெளிப்படுத்துவதுபோல், இவ்வான்மா அவ்வக அறிவாக உயரவிரும்பி அகிர்முகப்பட்டு, புலன்கள் தாங்கப் பெற்றதேகத்தைப் புறப் படுத்துகின்றது. இத்தேகம், அல்லது போர்வை பரம்பொருளுக்குவெகுதூரத்திலிருப்பதாகத் தோன்றினும், அகண்டத்தின் அனந்தத்தின் தன்மையைச் சிறிது பெற்றுளது. அக அறிவுள் தத்வப் பொருள்கள் அடங்கியுள; ஆன்மா அத் தத்வப்பொருள்களைத் தோற்றுவிக்கின்றது; அத்தோற்றங்களைத் தேகம் தாங்கிநிற்கின்றது. ஆன்மாவுக்குப் புலனுணர்ச்சிகளும், அக அறிவுக்குத் தத்வப் பொருள்களும் உதவுவனபோல், தேகத்திற்கு அத் தோற்றங்கள் அல்லது உருவங்கள் உதவுகின்றன. தேகத்தின் உருவம் அதனில் எவ்வளவு சத் உளதென்பதைக் குறிக்கின்றது; அதின் ஜடத்வம் அச் சத்தின் குறையை அறிவிக்கின்றது. உருவம் சத்தாகும், விஷயம் (Matter) அசத்தாகும். தோற்றவுலகம் இச்சத்தசத்துக்களால் இயக்கப்பட்டு ஓடியாடி மாறி வருகின்றது.

அசத் என்பது, கரையற்ற அகாத கணிக்கக்கூடாத பாழாகும். இவ்வசத் தேகமன்று; ஏனெனில், தேகமானது அசத் உருவம் (சத்), என்றவைகளின் சேர்க்கையாகும். உருவம் பருமன் நிறம் இன்னுமிவை போன்ற ஏனைய குணுதிசயங்களை அசத், தேகத்தைப் போல், பெற்றதன்று. எனின், இவ்வசத்தின் ஜடத்தின் குணந்தான்என்னை? குணமற்றிருப்பதேயாம், (மாயை என ஒருவாறு கொள்ளலாம்). சக்தியும் ஜீவராசிகளும் அக அறிவினின்றும் பரவஸ்துவினின்றும் தோன்றிப் பரிணமித்துள. ஆனுல், இவ்வசத், அல்லது ஜடம் என்பது அசக்தம், அளவற்ற குறை ஒற்றுமையின் மறுப்பு அதாவது பன்மை, பரஸ்பரமுரட்சி பிரிவு மழுக்கம் சிறிதும் உருவமுற்றிராமை, அதாவது விகாரம் நன்மையில்லாமை, அதாவது தீமைகளேயாம். கிரேக்க ஞானிகளின்படிக்கு, ஒற்றுமை ரூபம் அறிவு சுந்தரம் சிவம்என்பன ஒருபொருட் கிளவிகள்; இவைகளுக்கு விரோதமான ஒரு பொருட்கிளவிகள் பன்மை ஜடம் விகாரம் தீமை என்பன.

இதினின்று ஜடம் தீமை என்பன இல் பொருள்களெனக் கொள்ளக்கூடாது; அன்மையையே குறிப்பிப்பனபோலும். அதை இல்பொருளெனக் கூறுவது, எளிமை என்பது ஐச்வரிய மில்லாமையாகும், ஆதலால் எளிமை என்பது தனியாக உளதன்று, ஆதலால்

ஈதல் பொருளீட்டல் முதலானவை நிஷ்ப்பிரயோஜன மானவை எனத் தர்க்கிப்பது போலாகும். உண்மை இஃதல்ல. ஜடமில்லையாயின், உருவமுமில்லை. மனம் என்பது துல்லிய கேவல சுத்த வஸ்துவன்று, ஆனால் ஜடத்வத்தையும் அடங்கப் பெற்றுளது, அதாவது ஜடத்தின் உயரிய தூய நிலை, அல்லது மாற்றமே மனம். சுருக்கத்தில், இந்த அசத்தைப்பற்றி நிர்ணயிக்கப் புத்தியால் இயலாது. தனக்கு வேருக இயங்குவது என்றதை மாத்திரம் அறிய முடியுமே யல்லாது, அது எத்தன்மையது என்பதை உறுதியுடன் அறிதற்கியலாது. ஸ்பரிசிக்கக்கூடிய கருதக்கூடிய வைகளையே அறியப்படுபொருள் (Intelligible) என்போமாயின், ஜடம் என்பது அத்தகைய பொருளன்று, என்பது தெளிவாகின்றது. உருவமற்றதை அறிவது எவ்வாறு? ஜடத்தை அறிவது இருளைப் பார்ப்பதுபோ லாகும்; இருளைப் பார்த்தல் சூன்யத்தைப் பார்த்தலாகும்; ஆதலால், ஜடத்தை அறிவது உண்மையில், சூன்யத்தை அறிவதாகும்.

இவற்றை ஒளியின் ஓட்டத்திற்கு இவர் ஒப்பிட்டிருக்கின்றார். நெடுந்தூரம் ஓடிப் பரவிச்செல்லவே, எவ்வாறு சுயஜ்வலிப்பு, ஒளி அல்லது பிரகாசம் மழுங்குகின்றதோ, அவ்வாறே, சச்சிதானந்தவஸ்து இயங்கிப் பற்பல ரூபங்களாக மாறித்தோன்றி வியாபித்து மூலஸ்தானத்திற்கு அப்பாற்படப் படவே, அதின் சுய ஏகத்வமும் சச்சிதானந்த குணமும் குறுகுகின்றது. ஒளி மழுக்கத்தை இருளென்பதுபோல், பரம்பொருளின் இழிய இறுதி நிலையே ஜடம் விகாரம் தீமை எனப்படுவது.

இவற்றினின்று, ஜடம் என்பது பரம்பொருளைப் போலவே, அகண்ட அகாத அகோசர நிரந்தரப் பொருளோ?' என்ற கேள்வி பிறக்கலாம். இவ்விதமாயின், ஏகாந்தவாதம் மறுக்கப்பட்டு நிற்கின்றதன்றோ? இரண்டு அகண்ட அனந்த வஸ்துக்களைப் பாதத்வம் எவ்வாறு அங்கீகரிக்கக் கூடும்? மெய்யாதெனில், அப்பரம்பொருளுக்குள் இஜ்ஜடம் பதுங்கிக் கிடக்கின்றது போலும்: ஜடத்வமும் கடவுட்டன்மையும் ஆதியில், இணங்கி நிற்பன. கடவுட்டன்மையைத் தோற்றுவிப்பதே - நிரூபிப்பதே - ஜடமாகும். பரம்பொருளே, மேற் காட்டியபடி, படிப்படியாக இழிந்து, சிறுகிக் குறுகி ஜடமாகின்றது; இஜ்ஜடம், படிப்படியாக உயர்ந்து வளர்ந்து பரம்பொருளாக விளங்குகின்றது.

புத்திக்கும் தேகத்திற்கும் நடுவிலுள்ளது ஆன்மா. இவ்வான்மா ஓர் சிற்றுலகாகும்(Microcosm); இச்சா சக்தியின் வாசஸ்தானமாவது; புத்தியினுல் உயர்த்தப்படுவது; தேகத்தினுல் கீழிழுக்குப்பட்டு அலைக்கப்படுவது. ஆதலால், ஆன்மா புத்தியின்வசப்பட்டால் சீரிய பாரமார்த்திக புனித வாழ்க்கையை நடாத்துவதாகும்; புலன்வழிச் சேருமாயின், தாழ்ந்து, பற்பல பிறவிகளி லகப்பட்டுத் துடிக்கும். ஆதலால், ஆன்மா மூவகைத்து:—(1) புத்தியைப் பற்றித் தெய்வத்தியானத்தில் ஈடுபட்டு நிற்கும் ஆன்மா (2) மனம் தேகங்களிடையில், பூமி சொர்க்கங்களுக் கிடையில் தத்தளிக்கும் ஆன்மா (3) ஜடத்வம் பூரிக்கப்பெற்றுக் கெட்டு விலங்குகளாகவும் பறவைகளாகவும் பிறந்து அல்லற்படும் ஆன்மா.

தெய்விக ஆன்மா ஆனந்தம் ததும்பப்பெற்று ஒளிரும்; லௌகிகச் சிந்தனைகளற்று எக்கருமத்தையும் மேற்கொளாது சதா ஈச்வரத் தியானத்திலேயே தோய்ந்து நிற்கும்; உள்ளதை உள்ளவாறு உணரவல்லது; நம்பிக்கை நினைவு அநுதாபம் முதலியவைகளாற் கவரப்படாதது.

மானுட ஆன்மா எப்பொழுதும் இழிய தேகங்களைப் போர்த்துத் திரிந்தது மில்லை, திரிவதுமில்லை. ஆதியில், தெய்விகத்வம் நிறைந்து அகங்கார மமகாரங்களற்றுத் தெய்வசிந்தை யொன்றுடனே விளங்கிற்று. பின், அகங்காரமும் மமகாரமும் மேற்கிளம்பவே, சுயநன்மை மழுங்கி, இழிய தேகங்களைப் போர்த்து அலைய ஆரம்பித்தது. இம்மையில் அநுபவிக்கும் வலி வருத்தம் ஏக்க மாகியவைகளே அவ்விழிவின் பலனும் தண்டனையுமாகும். எனினும், சுயேச்சையினுல் பிரிந்ததுபோல், அச்சுயேச்சையினுலேயே நன்னெறியைப்பற்றித் துறவுபூண்டு ஒழுகி, பூர்வ பரிபூரண நிலையி லமரலாம். தீமையை அநுபவமூலமாய் அறிந்து, தன் சுயசக்தியைப் பலவிதங்களிலும் உபயோகித்துப் பார்த்துத் திடம்பெற்று, புத்தி வளர்ந்து உயர இடந்தருவதால், மானுடப் பிறவி தீமையன்று. சர்வநன்மையும் எழிலும் நிரம்பப்பெற்ற மூலவஸ்துவை மனப்பதற்றமும் சோர்வு முறுமல் தரிசித்து இனிக்கச் செய்வதால், பிரகிருதி இகழத்தக்கதன்று.

எழிற்கலைகளும், பிரதானமாகச் சங்கீதமும், அநுராகம் அல்லது அன்பும், தத்வஞானமும் ஈச்வரனுடன் சேர்ப்பன. இவைகளே மூலவஸ்துவுள் ஒடுங்குதற்கான மும்மார்க்கங்கள், அல்லது ஒரே வழியின் முப்படிகளாவன. எழிற்கலைஞன் மூலதத்வவஸ்துவை தோற்றவுலகின் வழியாகக்கண்டு களிக்கின்றான். அநுராகியும் அறவோனும் பிற ஆன்மாக்கள் மூலமாக உண்மை யறிந்து சுகிக்கின்றான். தத்வக்ஞனே விசாரிப்பு மூலமாக உயர்ந்து சுகிர்த வாழ்க்கையைப் பற்றிச் சுயஞானச் செழிப்பினுல் கடவுளைத் தரிசித்துப் பேரானந்தத்தில் மூழ்குகின்றான். புத்தியின் உயர்வையும் சுயஞானத்தின் வன்மையையும் தியானத்தின் தூய்மையையும் கிரஹித்துணர்ந்தவன் இவ்வுலகாதிகளில் உழலான்; எழிற்கலைகளிலும் அநுராக விஷயங்களிலும் ஈடுபட்டு மதிமயங்கான்; சுகபோகாதிகளை வெறுப்பான்; தேகத்தைப் பொருட்படுத்திப் போற்றான்; சதாகாலமும், சமாதியிலாழ்ந்து இன்பமுற்றிருக்க விரும்பி முயற்சிப்பான்.

இம்மையில், ஞான அற விஷயங்களில் பிரவிர்த்தித்துப் பாடுபட்டவன் இறந்தவுடன் பூர்ணநிலை யிலமர்வான் என்பதில்லை. பற்பல முயற்சிகளால், கர்மபலன்களும் தற்சிந்தனையும் முற்றிலும் அற்றபின்தான் உயர்வான். பல பிறவிகள் வழியாகத்தான் இது சாத்தியமாகும்.

முற்றிற்று.

[illegible] பாஷை

இந்த நூதன பாஷையை 15 நிமிஷங்களில் கற்றுக்கொண்டு பேசவும், எழுதவும் ஆரம்பித்துவிடலாம். இந்தப்பாஷையில் வியாபாரரகசியங்களைக் குறித்துக்கொண்டால் பிறர் கண்டுகொள்ள முடியாது. இப்பாஷையில் ஸ்திரீகள் கணவர்களுடன் குடும்ப ரகசியத்தைப் பேசினுல் பக்கத்திலுள்ளவர்கள் ஒற்றுக்கேட்டுப் பிறரிடம் சொல்லிக் கோள்மூட்ட முடியாது. இது ஓர் அபூர்வ தமிழ்ப்பாஷை. சொல்பகாபிகளே இருக்கின்றன. மூர்த்துங்கள். விலை அணு 8.

அமிர்த குணபோதினி

இதுபோன்ற நவீன மாதாந்தர ஸஞ்சிகை இதுவரைத் தமிழில் வெளிவந்ததில்லை. இதிலுள்ள விஷயங்கள் யாவும் வாசிப்பவர்கள் மனதிற்குப் புதியதாகவும் அற்புதமாகவும் புலப்படும். இப்பத்திரிகையில் ஜாதி, மத வித்தியாசமின்றிச் சகல மதஸ்தர்களையும் களிக்கச்செய்யும் வியாஸங்களைப் பிரதிமாத சஞ்சிகையிலும் காணலாம். மாதிரி காபி ஒன்று வாங்கி வாசித்தபின் பிறர் சிபார்சு இல்லாமல் நீங்களே வாங்குவீர்களென்பது நிச்சயம். பிரதி மாதம் 56 பக்கங்களுடன் வெளிவரும். வருஷ சந்தா ரூபா 1. வெளிநாடு ரூபா 1—4—0. மாதிரி காபி இனும்.

10-ம் பதிப்பு] **ஆங்கில ஆசான்** [வந்துவிட்டது

[எமது லேடி டிரேட் மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.]

60-நாட்களில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடியவிதமாய் அப்பியாசப் பாடங்களாக வகுத்து முன் பதிப்புக்களைவிட அதிக பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துக்களில் அச்சிட்டுள்ளோம். இதுவரையில் 53100 புத்தகங்கள் செலவாயிருப்பதாலேயே இதன் மேன்மை விளங்கும். இப்பத்தாம் பதிப்பு ஆங்கில ஆசான்போல் வேறு எந்தப் புத்தகங்களிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள முடியாது. நமது முன்பதிப்புப் புத்தகங்களை வைத்திருப்பவர்கள்கூட 10-ம் பதிப்பைப் பார்த்தால் இதிலும் ஒன்று கட்டாயம் வாங்க வேண்டுமென்று எண்ணுவார்கள். இதில் 1-அணு முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகைக் கணக்கு உளது. 800-பக்கங்களுக்கு மேல்கொண்ட அழகிய சீமை கலிகோ பைண்டு விலை ரூபா 2.

தி. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலைவீதி, மதராஸ்.

கம்பராமாயணம், பாலகாண்டம்.

புதியதோர் வகையினதான ஸ்ரீமான் T. N. சேஷாசலமையர் பதிப்பு. செய்யுள்களுக்குப் பதவுரை கூறுது, பதம் பிரித்தும் தொகை விரித்தும், அன்வயப்படுத்தியும் படிப்பவர் தாமே முயன்று பொருள் தேடுமாறு ஆக்கப்பட்டுளது. கடினமான பதங்களுக்கு உரை சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூ. 3.0.0. தபால் செலவு வேறு.

ஏமாங்கதத்திளவரசன்.

T. N. சேஷாசலம் ஐயர் இயற்றிய நூல். இலக்கிய நலங்கள் யாவும் துலங்குமோர் காதற்கதை. அன்பின் வன்மையும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்து செய்யும் துன்மதிச் சூழ்ச்சியும், வீரனொருவன் மண்மோகமும், இக்கதையை நிகழ்த்திவைக்கும் பெருமையைப் படிப்பவரே அறிவர். விலை ரூ. 1-0-0.
தபால் செலவு வேறு.

கந்தபுராண வெண்பா.

வெண்பாப் புலி என்ற புகழ்தாங்கிய ஸ்ரீ தி. சு. வேலுசாமிப்பிள்ளை அவர்கள் இயற்றியநூல் இது. 6-காண்டங்களும், 5665 செய்யுள்களும் கொண்டது. ஓதுதற்கினிய நேரிசை வெண்பாக்களால் ஆயது. கற்ருேர் இதயம் களிக்கச் செய்யவல்லது. விலை ரூ. 4-8-0.
தபால் செலவு வேறு.

முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான் K. S. வெங்கட்டரமணி M.A., B.L. ஆங்கிலத்தில் செய்த நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு. ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி மொழி பெயர்ப்பாசிரியர். இக்கதையின் அமைப்பும், சொல்லும் வகையும், எளிய நடையும், படிப்பவர்க்குக் களிப்பைத் தரவல்லன. விலை ரூ. 1—8—0.
தபால் செலவு வேறு.

கலா நிலயம், வெள்ளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

Our Publications.

Kamban's Kosala.

By T. N. Seshachalam, A succint exposition of the poetic Art and the sublime Political Philosophy of Kamban as can be gleaned out of the first four chapters of Balakandam Dr. James H. Cousins has written a foreword in terms of appreciation. Price Re. 1.

Thoughts for Statesmen

By T. N. Seshachalam. We who are making large strides towards democratic institutions may well pause and hear, what the great masters **Tocqueville and Montesquieu** have thought and said. Mr. S. Srinivasa Iyengar has introduced this book. Price Rs. 1-8-0.

மேனுட்டுப்பேரறிஞர் நால்வர்.
கார்லைல், எமர்ஸன், ரஸ்கின் டால்ஸ்டாய், இவர் தம் கட்டுரைகள் சிலவற்றின் முதனூல் சுவை குறையா மொழிபெயர்ப்பு. விலை 0-8-0.

முப்பெரும் புலவர்
கம்பன், காளிதாசன், ஷேக்ஸ்பியர் ஆகிய பெருங்கவிகள் ஜீவிய சரிதை. விலை அணு 4.

உலக அதியசம். விலை அணு 4.

விசித்திர விளக்கு.
எளிய தமிழ் நடையிலான அலாவுதீன் என்னும் அரபிக்கதை. விலை அணு 6.

வாழ்க்கைச் சரிதை. விலை அணு 4.

Sambandar (English) விலை „ 4.

Vali (Do) விலை „ 4.

The Educational Publishing Co., *Nungambakam, Madras.*

இந்தியாவிலும் பர்மாவிலும்

எங்கள்

தங்கக்கலன்களும் வெள்ளிக்கலன்களும்

உபயோகத்தோடு சுத்தமும் அழகும் சேர்ந்திருக்குந் தரத்தினை அனைவரும் அறிவர்.

சுத்தம்

சுத்த வெள்ளியும் சவரன் பொன்னுமே உபயோகப் படுத்துகின்றோம். உலோகத்தின் சுத்தத்திற்கு அடையாளமாக நாங்கள் செய்த சாமான்களின்மேல் டையமண்ட் டிரேட் மார்க் காணப்படும்.

அழகு

எமது மாதிரிகள் புதியன. கண்ணைக் கவரும் அழகுடையன. எங்களுக்கே பிரத்தியேகமான இவை, நவத்திலும் நவமான நாகரிகமுடைய வெள்ளி வேலைகளின் அழகையும் பெருமையையும் அமையப் பெற்றிருக்கின்றன.

உபயோகம்

சுத்த வெள்ளிச் சாமான்களையே வாங்குவதன் இலாபம் எவருக்கும் தெரியும். வாங்கும் விலையையும், எத்தனைவருஷம் அந்தச்சாமானின் அழகு அழியாம லிருக்குமென்பதையும் வகுத்துப் பார்த்தால், "சிறந்த சாமான்களே மலிந்த சாமான்களுமாகும்" என்னும் பழமொழி பழுதாகாததை யறிவீர்.

குடும்பத்து வெள்ளிச் சாமான்கள் யாவராலும் மனங்கனிந்து பாராட்டப்படுவன. அவைகளைக் காணுந்தோறும் முன்னை நினைவுகள் பல ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடர்வது இயற்கையே. தலைமுறை தலைமுறையாய் இவைகளையும் இவைகளை வாங்கிவைத்த உங்களையும் கொண்டாடுவார்.

வாங்கி நீங்கள் வைத்து மகிழ்வதற்கும் நன்கொடை அளித்து மகிழ்விப்பதற்கும் உரிய எங்கள் வெள்ளிக்கலன்களை மனமுவந்து காட்டுகின்றோம், வாருங்கள்.

வெகுமதியளிக்க

வெள்ளிக் கலன்கள் உபயோகத்தாலும் அழகாலும் தனக்குச் சமானமில்லாத் தனிப்பெருஞ் சிறப்பாலும் அழியாத் தன்மையாலும் மிகப் பொருத்தமானவை.

கப் காஸ்கெட் தட்டு, அல்லது செட்டாகச் சேர்ந்த சாமான்கள் எங்களிடத்தில் தயாராக இருக்கின்றன. இவைகளிலிருந்து வாங்கிக்கொண்டாலும் சரி, இஷ்டமான மாதிரிப்படி எங்களிடம் செய்வித்துக்கொண்டாலும் சரி-பெற்றுக்கொள்பவர் தம்பொருட்டுக் கவனம் செலுத்தித் தேர்ந்தெடுத்திருக்கின்றீர்கள் என்று உங்களை மிகவும் பாராட்டுவர்.

அளவற்ற சாமான்கள் எங்களிடத்தில் செய்து தயாராயிருக்கின்றபடியால் நீங்கள் வேண்டியதைத் தேர்ந்துகொள்வது வெகு சுலபம். நாங்களும் உங்கள் தேவைக்குத்தக்கபடி எடுத்துத் தருவோம்.

எங்கள் கொள்கை

யோக்கியமாகவும் கவுரவமாகவும் நாங்கள் சரிவரச்செய்து விர்த்தி யடைகின்ற வைர வியாபாரத்தைப்போலவே இந்த வெள்ளிச் சாமான் டிபார்ட் மெண்டையும் நடத்தி வருகின்றோம். ஒருமுறை எங்களிடம் வெள்ளி பொன் கலன்கள் வாங்குபவர் பொருள்களின் தூய்மையையும் அழகையும் கண்டு பின் எங்களிடமே செல்வர்.

எங்கள் எஸ்டிமேட்

எந்தச் சாமான் எந்த மாதிரியில் வேண்டுமானாலும் கேளுங்கள். டிஸைன்களும் எஸ்டிமேட்டும் அனுப்புவோம்.

உங்கள் ஆதரவை வேண்டுகின்ற

ஸூராஜ்மல் லல்லுபாய் & கோ.,

135, பெரிய பஜார் திரிச்சிராப்பள்ளி. | வைர வியாபாரிகள், நகைகட்டுவோர் பொன்வெள்ளிக் கலன்கள் செய்பவர். | **313**, எஸ்பளனேட், சென்னை.

SURAJMAL LALLUBHAI & CO.,

DIAMOND MERCHANTS AND JEWELLERS,
GOLD AND SILVER SMITHS.

135, Big Bazaar, TRICHY.

313, Esplanade, MADRAS.

வர்த்தமானம்.

ஆப்கன் நிலைமை:—நிலைமையில் மாறுதல் ஒன்றும் ஏற்படவில்லை என்று தெரிகின்றது. இப்பொழுது மூவர் அரசராக முயல்கின்றனர். காபூலிலிருந்து பிரிட்டிஷ் குடிகளை இந்தியாவுக்குஅழைத்துவர முயற்சி நடந்து வருகின்றது. ஆலிஆமத்கான்என்பவர், அமீர் அமனுல்லாவின் கீழ் ஒரு பிரதேசத்தின் கவர்னராயிருந்தவர். அவரும் இப்பொழுது அமீராவதற்குப் படை திரட்டி வருகின்றார். சிறுசண்டைகளும், குழப்பங்களும் நடைபெற்று வருகின்றன.

***

ஆப்கானிஸ்தானத்தில் இந்தியர் நிலை:—ஆப்கானிஸ்தானத்தில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக, அங்கு வசிக்கும் இந்துக்களும் சீக்கியரும் கஷ்டப்படுத்தப் படுகின்றனர் என்று பரவிய வதந்தியில் உண்மையில்லை என்றும், புதிய அரசாங்கத்தார், இந்துக்களையும் சீக்கியரையும் சிவப்புத்தலைப்பாகை தரித்துக்கொள்ளும்படி உத்தரவிட்டதைத்தவிர வேறொன்றும் நடக்கவில்லை என்றும், இந்து சீக்கியர் கோயில்களும் தர்மசாலைகளும் பாதுகாக்கப்பட்டுவருகின்றனவென்றும் பிப்பிரவரி மாதம் 2-ந்தேதியிட்டுவந்த செய்தி கூறுகின்றது.

***

பகிஷ்கார முயற்சி:—தமிழ்நாட்டுக் காங்கிரஸ்கமிட்டிக் கூட்டம் மஹாஜன சபையில் சமீபத்தில் சைமன் கமிஷன் பகிஷ்கார விஷயமாய் யோசனை செய்யக் கூடியது. பகிஷ்கார வேலைக்கெனக் கமிட்டி 1000 ரூபாய் சாங்ஷன் செய்தது. வட ஆற்காட்டில் பகிஷ்காரப் பிரசாரம் செய்ததற்காகக் கைதுசெய்யப்பட்ட காங்கிரஸ் தொண்டர்களின் தேசபக்தி பாராட்டப்பட்டது. சட்டசபையில் மதுவிலக்கிற்கும், கதர் வளர்ச்சிக்குமான முயற்சி எடுக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

***

பம்பாயில் குளிர்:—கடந்த நூறு வருஷங்களில் இப்பொழுதுபோல் சீதோஷ்ண ஸ்திதியில் மாறுதல் ஏற்படவில்லை. பம்பாயின் சீதோஷ்ண நிலை 34 டிகிரி என்று தெரிகின்றது. இங்கிலாந்திலும் குளிர்காலத்தில் இந்நிலை யிராது. குளிர்தாங்காது ஜனங்கள் கஷ்டப்படுகின்றனர். சிலர் இறந்தும்போயினர். பெலுசிஸ்தானம் பெஷாவர், பஞ்சாப் முதலிய விடங்களில் மூடுபனி பெய்கின்றதெனத் தெரிகின்றது. லாகூரிலுள்ள நதிகளில் அரையங்குலஜலம் உறைந்துளதாம். ஜனங்கள் இறந்து போகின்றனர் என்று பலவிடங்களிலிருந்தும் வரும் செய்திகள் மூலம் தெரிய வருகின்றது.

***

தேவதாசிச்சட்டம்:—வெள்ளிக்கிழமை மாலை கூடிய சென்னைச் சட்டசபைக் கூட்டத்தில் பொட்டுக்கட்டும் வழக்கத்தை ஒழிக்கவும், வியபசாரத்தைப் போக்கவுமென்று ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி அம்மாள் கொண்டு வந்த தேவதாசி மசோதா யோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுச் சட்டமாயது. கோவிலில் பணிசெய்வதற்கெனப் பொட்டுக் கட்டும் வழக்கத்தை ஒழிப்பதும், அதற்கெனத் தாசிகள் அனுபவித்துவரும் நிலங்களை ஒத்தியாகவோ, அல்லது சொந்தமாகப் பட்டாச் செய்தோ விடுவதும், அந்நிலங்களுக்குச் சர்க்கார் கிஸ்தி போட்டு விடுவதும், அந்நிலத்தை அனுபவிப்பதற்காகக் கோவிலுக்குச்சென்று பணிசெய்யவேண்டுவதில்லை என்பதும் இம்மசோதாவின் முக்கிய அம்சமாகும். அரசாங்க அங்கத்தினர் இதில் கலந்து கொள்ளவில்லை. ஓட்டும் கொடுக்கவில்லை.

***

இரங்கூனில் சைமன் கமிஷன்:—சென்ற வாரம் சைமன் கமிஷன் அங்கத்தினர் இரங்கூன் போய்ச்சேர்ந்தனர். காங்கிரஸ் தலைவரான ஸ்ரீ மேட்டா பகிஷ்கார ஊர்வலத்தை நடத்தினர் என்றும் பர்மியர் பலரும் இதில் சேர்ந்துகொண்டனர் என்றும் இதுபோன்ற காட்சி இதுவரை இரங்கூனில் ஏற்பட்டதில்லை என்றும் இரங்கூன் செய்தி கூறுகின்றது. கமிஷன் அங்கத்தினர் நடத்தும் விசாரணையில் டெபுடி கமிஷனரிடமிருந்தும் ... மிடத்திலிருக்கும் கமிஷனர் ஜெ. ஜெ. ஆண்டர்ஸன் சாட்சியங்கொடுக்கையில் கூறியதாவது:—பர்மா முன்னேற்றத்திற்கு இந்தியர்செய்துளது சிறிதன்று. இப்பொழுது எத்துறையிலும் இந்தியர் உதவியாகவேயிருந்து வருகின்றனர். பர்மாவின் பொருளாதார, வர்த்தக விர்த்திக்கு இந்திய மூலதனமே காரணமாகும். இந்தியத் தொழிலாளர்களும் பர்மியத் தொழிலாளருக்குப் போட்டியாயிருக்கவில்லை. விவசாய விஷயங்களில் பர்மியத் தொழிலாளருடன் இந்தியரால் போட்டிபோட முடியாது. ஆனால் இந்தியர் அத்துறையில் பெரிதும் துணைபுரிந்து வருகின்றனர். பர்மாவிற்கு இந்தியரின் உதவி அவசியம். பர்மாவில் ஏற்பட்ட அரசியல் விழிப்பிற்கும் இந்தியரே காரணம்.

***

கார்ப்போரேஷனைப் பற்றிய அறிக்கை:—சென்னைக் கார்ப்பொரேஷன் சென்ற வருடத்தில் செய்துள்ளதைப்பற்றி அரசாங்கத்தார்விடுத்த அறிக்கை:-சென்னை 23 டிவிஷன்களில் கார்ப்பொரேஷன் அதிகாரிகள் கட்டாயக் கல்விமுறையை ஏற்படுத்தியுள்ளது அவர்கள் கல்வி முன்னேற்ற வேலையைக் குறிக்கின்றது. இரவுப் பள்ளிக்கூடங்களுக்கு இடவசதிகொடுத்தும் சில பள்ளிக்கூடங்களுக்கு மின்சார விளக்கு வசதி கொடுத்தும் வருகின்றனர். 1928 வருஷத்தில் 1927க் காட்டிலும் 3,359 பிள்ளைகள் கார்ப்பொரேஷன் பள்ளிகளில் படித்து வருகின்றனர். ஒவ்வொரு டிவிஷனிலும் வயித்தியவசதி ஏற்படுத்தப் பட்டுள்ளது. ஜலவசதிக்கும் சுகாதாரத்திற்கு செலவு அதிகமாய்ச் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் ஜலத்தை ஜனங்கள் வீணாக்காது போதுமானபடி அதிகாரிகள் பார்த்துக் கொள்ளவில்லைஎன்பது அரசாங்கத்தார் அபிப்பிராயம். 1928 இல்மரணத்தொகை 1926, 1927க் காட்டிலும் குறைந்துளது. ஜனன கணக்கின்படி முகமதிய வகுப்பினரிடமே ஜனனம் திருப்திகரமாய் அதிகரித்துளது. கார்ப்பொரேஷனின் பணநிலை அவ்வளவு திருப்திகரமாயில்லை. அவ்விஷயம் கவனிக்கப்படவேண்டும். அரசாங்கத்தார் உதவுவதில்லை என்று அவர்கள்மேல் பழியைப் போட்டுவிடுவதில் பிரயோஜனமில்லை.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

கலா நிலயம்

1928 வருஷத்திய பிரதிகள் முழுவதும் பைண்ட் செய்தும் செய்யாமலும் எங்களிடம் கிடைக்கும்.

அதனிலடங்கிய முக்கியமாயகட்டுரைகள் தொடர்ச்சியாய் வந்தன:—சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும், கம்பராமாயணம். தமிழ்ப்பாடம், அகப்பொருள் வரலாறு, காந்திமதியென்னும் செந்தமிழ் நாவல், தேவாரமும் ஐந்திணையும், கிரேக்க தத்துவ சாஸ்திரங்களின் விளக்கம், இவைதவிர கார்லைல் ரஸ்கின் எமர்ஸன் முதலிய ஆங்கிலப் புலவர் கட்டுரைகளின் மொழிபெயர்ப்பு. இன்னும்பல விஷய விஷயங்கள் அவ்வப்போது வந்தவை எண்ணிறந்தன.

விலை:—தபால் சார்ஜ் உள்பட:—

பைண்ட் செய்யாதது
உள்நாட்டிற்கு ரூ 8-0-0.
வெளிநாட்டிற்கு 9-8-0.

ஆப்லெதர் கில்ட் பைண்ட்,
உள்நாட்டிற்கு ரூ. 10-0-0.
வெளிநாட்டிற்கு ரூ. 12-8-0.

புல் காலிகோ கில்ட் பைண்ட்,
உள்நாட்டிற்கு ரூ. 9-8-0.
வெளிநாட்டிற்கு ரூ. 12-0-0.

வேண்டுவோர் முன்னதாகப் பணம் அனுப்பிக் கேட்கவும்.

மானேஜர்,
11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

உ

வியாஸங்கள்.

வியாஸங்கள் ! வியாஸங்கள்! !

வியாஸங்கள் மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மையடையக் கூடியவிதமாக எழுதப்பட்டுள்ளன.

கீழ்கண்ட வியாஸங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும். நமது முன்னோர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறார்கள். காரணம், அவையாவும் செய்யுளாக இருப்பதினால். இந்த வியாஸங்கள் அச்செய்யுட்களையே பெரும்பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக்கின்றன.

	ரூ.	அ.		ரூ.	அ.
அன்பு	0	1	பொதுமதம்	0	2
பலவகை மனிதர்	0	1	ஆருதாரம்	0	2
தவம்	0	1	சந்தேகம்	0	2
பொறுமை	0	1	கற்பு	0	3
இருவினை	0	2	அஸ்தபூஷணம்	0	4
இல்லறம்	0	2	பதினாறுபேறு	0	4
ஆலயவழிபாடு	0	2	என் தந்தையார்	0	6

மேல்கண்ட பதினான்கு புத்தகங்களையும் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு ரூபாய் இரண்டுக்குக் கொடுக்கப்படும்.

தபால் சார்ஜ் இனும்.

இன்றே எழுதுங்கள் !

நவீனகதா புத்தகசாலை,
மங்கமாரி வீதி, இரங்கூன்.

189041

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"
11, VELLALA STREET.
Purasawalkam, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)